[illegible]

V 5 · No. 23 · 9 ஜூன் 1932

3L
O2 11, N28KN
N32·5·23
188971

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

5 - JUL 1932

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைபாக்கம், சென்னை.

Vol 5] 1932 ௵ ஜுன் ௴ 9உ [No. 23

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 441
2. தமிழ்ப்பாடம்
   நளவெண்பா - சுயம்வரகாண்டம் 443
3. குன்றுடையானும் மக்களும்
   W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T. 445
4. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (சிற்றிற் பருவம்) கி. வெங்கடசாமி ரெட்டியார் 446
5. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
   E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 447
6. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா
   T. R. இராஜகோபால் 448
7. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து 1-ம் தசகம்)
   K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 449
8. அரவரசி கதை—ராவ் பகதூர் C. M. இராமசந்திரன் செட்டியார் B. A., B. L. 451
9. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 2.)
   ஷேக்ஸ்பியர் நாடகம் 452
10. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்)
   T. N. சேஷாசலம் B.A. B.L. 455
11. சொல்லூடாட்டம் 3. 457
12. வர்த்தமானம் 459

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 15.

வித்தகமுடையவர்களை வந்தெய்தும் இன்னல்கள் ஏனையோர்எய்தும் இன்னல்கள்போலவேதோன்றுமாயினும் அவ்வித்தகர்க்குரிய இன்பங்களின் சிறப்பியல்புதான் ஈதென்று பிறரால் ஊகிக்கஇயலாதென்பதைச் செப்பி, மற்று, அவ்வின்பநிலை உயர்வடைந்த உண்மையை அவர்தம் செய்கைகளின் ஐயமற விளங்குந் தூய்மையிற்றானே கண்டறிந்துகொள்ளலாம் என்பதையும் முன்னைநாள் கூறினோம். தூய செய்கைகள் என்பன தன்னல மறுத்த தியாகங்களே யாதலின், அத்தியாகம் என்னுந் தத்துவத்தின் உண்மைத் தூய்மைக்கியன்ற மறைபொருள் ஒன்றிரண்டு இங்கு எடுத்து ஆராயப்பெற்றன. விழுமிய வாழ்க்கையில் வழிவழி சிறப்பன தியாகமும் நீதியும் எனினும், வாழ்க்கையின் நோக்கமே தியாகமாவதின்றி, வேறோர் நோக்கத்தை நடத்திவைக்குங்கால் தியாகம் நிகழநேர்கின்ற நீர்மையே வித்தகத்தின் வைப்பாகுமாறினைத் தெளிந்த நாம் வித்தகத்தின்பால் நீதியின்நிகழ்ச்சிஎத்தன்மைத்தென்பதையும் சிறிதினி நோக்குதற்கேற்ற தகுதியுடையவர்களாயிருக்கின்றோம்.

விதி வலிதென்பர்: ஆம், கோடா நீதிச் செங்கோல் தாங்கி அவ்விதிதான் அவரவர்க்குரியவைகளைக் குறையும் மிகையுமின்றி வழங்குகின்றதோ, அல்லது வல்லான்வகுத்ததே வாய்க்கால்என்னும்படி நம்மைத்திண்டாட்டங்காண்கின்றதோ என்னுங் கேள்வியை எழுப்பிவிடுதல் எளிது; அதற்கு அமைதிகாணலோ அரிது. ஏனெனில் பொறையும் அருளும் அறமும் கடவுட்பக்தியும் விழுமிய ஒழுக்கமும் உடையவர்களிற் சிலர்க்கு மேன்மேல் துன்பங்களும், பாவத்திலும் பழியிலுமே மூழ்கிய வாழ்க்கையினோரிற் சிலர்க்கு இன்பங்களும் நேர்ந்திடக்காண்கின்றோம். இதனால் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இலவென்னும்படி கலங்கவேண்டி வருகின்றது. எனினும், விதியின் வழங்கும் விளையாட்டன்று என்ற நம்பிக்கையும் அடுத்தடுத்து எழுவதால் மக்கள்மதி இவ்விரண்டிற்கு மிடையே ஊசலாட, பின் விதியின் நீதியிற்றானே தம்நம்பிக்கை உறுதியுடனிலைக்கும்பொருட்டுப் பற்பலகாரணங்கள் கற்பிக்கத் தலைப்படுகின்றனர். நாம் அறியமாட்டாக்காரணங்கள் இன்னும் எவையுளவோ விதிதான் இவ்வாறு செய்தற்கு! என நாம் ஏங்குகின்றோம். நீதி வழங்கப்பெறுவதில்லை என்ற எண்ணம் வலிவடையுமாயின் தருமத்தின்பால் வைத்திருந்த நம் நம்பிக்கை தளர்ந்துவிடுமே. ஏனெனில் நல்லவர்களுக்கு நன்மையும் தீயவர்க்குத் தீமையும் வரன்முறையில் நெறிபிறழாமல் வழங்கப்பெறுவதே இவ்வுலகம் நடைபெறுவதற்கு அடையாளமாக மனிதர்கருதப்பயின்றிருக்கின்றாராதலால்நல்லவர்சிலர் கேடடைந்தாலும் அல்லதுதீயவர் நலமடைந்தாலும், நன்மையுந் தீமையும் நல்குவது அவரவர் விதியே என்னுங் கொள்கைக்கிணங்க, அவ் விதியானது தருமஞ்சிதையத் தன்னரசினைச் செலுத்துகின்றதென மயங்கிவிடல் இயற்கையே. நீதிநெறியறியா விதியிருக்கத் தருமமுறைகள் என்ன பயனும் இல, என்னுங்கொள்கை நம்மிதயத்தைத் திருவப்புகுமாயின், பின் வாழ்க்கை நிலை நைந்தழிந்து கடுங்காற்றி லகப்பட்ட பஞ்செனச் சிதைந்து சுழல்கின்றது. பொதுமாறுடர்முடிவடையும்

கதி இது; வித்தகர்கள் வேறறிவார். விதிதானே நமக்கு வழங்காதவொரு நீதியை நாம்மாத்திரம் பிறருக்கு வழங்குவானேன் என்றவர் கேட்கமாட்டார். மற்று, இவ் வித்தகர் மெய்த்திறத்தினை மேடர்லிங்க்கே உரைக்கக் கேட்போம்.

"We are no longer able to accept the narrow morality of positive religion, which entices with reward and threatens with punishment; and yet we are apt to forget that, were fate possessed of the most rudimentary sense of justice, our conception of a lofty, disinterested morality would fade into thin air. What merit in being just ourselves if we be not convinced of the absolute injustice of fate? We no longer believe in the ideals once held by saints, and we are confident that a wise God will hold as little account the duty done through hope of recompense, as the evil done for sake of gain; and this even though the recompense hoped for be nothing but the self-ensuing peaee of mind. We say that God who must be at least as high as the highest thoughts He has implanted in the best of men, will withhold His smile from those who have desired but to please Him; and that they only who have done good for the sake of good and as though He existed not, they only who have loved virtue more than they loved God Himself, shall be allowed to stand by His side. And yet, and for all this, no sooner does the event confront us, than we discover that we still are guided by the "moral maxims" of our childhood, of more avail would be a "List of chastised virtues." The soul that is quick with life would find its profit therein; the cause of virtue would gain in vigour and in majesty. Let us not forget that it is from the very non-morality of destiny that a nobler morality must spring into life; for here, as everywhere, man is never so strong with his native strength as when he realizes that he stands entirely alone. As we consider the crowning injustice of fate, it is the negation of high moral law that disturbs us; but from this negation there arises at once a moral law that is higher still. He who no longer belives in reward or punishment must do good for the sake of good. Even though a moral law seem on the eve of disappearing, we need have no cause for disquiet; its place will be speedily filled by a law that is greater still. To attribute morality to fate is but to lessen the purity of our ideal; to admit the injustice of fate is to throw open before us the ever-widening fields of still loftier morality. Let us not think virtues will crumble, though God Himself will seem unjust. Where shall the virtue of man find more everlasting foundation than in the seeming injustice of God.

*　　　*　　　*

"If there were profit in virtue, then would the noblest of men be compelled to seek happiness elsewhere; and God would destory their main object in life were He to reward them often. Nothing is indispensable, perhaps or even necessary; and it may be that if the joy of doing good for the sake of doing good were taken from the soul, it would find other, purer joys; but in the meantime, it is the most beautiful joy we know, therefore let us respect it. Let us not resent the misfortunes that sometimes befall virtue, lest we at the same time disturb the limpid essence of its happiness. The soul that has this happiness dreams no more of reward, than others expect punishment because of their wickedness. They only are ever clamouring for justice who know it not in their own lives."

"தங்கள் வாழ்க்கையில் நீதியென்பதை நினைத்தறியாதவர்களே, நீதிநீதி யெனப் பலவேண்டி என்றென்றும் மன்றாடி நிற்பர்" எனச்சாதிக்கும் இவ் வுறுதிவாக்கியத்தின் மேன்மைக்கெதிரே, தனிவழக்கிழுத்து நீதிமன்றங்கள் நாடுவாரும், ஒருசாதியார் மறுசாதியாரை நீதியுடன் நடத்துவதில்லை என்று மிகப்பரிந்துபேசுவாரும், நம்மை ஆள்பவர் அபலாராதலின் நீதிவழங்க நினைக்கின்றாரலர் எனக் கலகங்கள் செய்வாரும், இவர்களனைய ஏனையோரும், தத்த மிழிவைத் தாமே நினைத்து நாணத்தால் ஒடுங்கிச் சாம்பவேண்டாவோ!

நமக்கு அநீதிசெய்து துன்புறுத்தவருகின்ற ஒருவன், தான் புகட்டுந் துன்பத்தைக் காட்டிலும் தன்னுடைய இன்பத்தையே பெரிதும் அழித்துக்கொள்கின்றவனாகின்றான். இதனை உணர்ந்துகொள்ளும்படி நமது உள்ளம் அகன்று வளர்ந்திருக்குமாயின், அவனது அறியாமையும் அதனால் அவன் இழக்கும் இன்பத்தையுங்கண்டு இதயம் உருகி இரங்குவோமே யல்லாமல், அவன் நமக்குச் செய்யும் அநீதியை முனியமாட்டோம், அவனிழைக்கும் இடுக்கண்களால் வருந்தவும் மாட்டோம்.

"For indeed if our tears can flow because of our enemies' malice, it is only because we ourselves would fain make our enemies weep. If the shafts of envy can wound and draw blood, it is only because we ourselves have shafts that we wish to throw; if treachery can wring a groan from us, we must be disloyal ourselves. Only those weapons can wound the soul that it has not yet sacrificed on the altar of love. Complaints of injustice grow less frequent as the brain and heart expand."

என்பார், இதயமும் மதியும் அகன்று பெருகிய வித்தகர் மேடர்லிங்க்.

நமக்குப் புறத்திலே நீதியோ இருப்பதன்று, நம் உள்ளத்திலோ அநீதி இருத்தல் இயலாது. நீதியற்ற காரியம் ஒன்று செய்யும்போதெல்லாம், மெய்யின்பநிலையினை நாமின்னும் நினைக்கவும் துவக்கவில்லை என்பதையே நிரூபிக்கின்றோம்.

மற்றவர் நமக்குச் செய்யும் அநீதிகளால் நாம் வருந்துவதுபோல் தோன்றும் நிலைமைக்குரிய இத்தத்துவங்களே விதியின் திறத்திலும் நினைத்துக்கொள்வதற்குத் தகும். முறைகெட வழங்குமோ வழங்காதோ விதி என்ற கேள்வி உயரிய வாழ்க்கையில் ஊக்கமுடையோர்பால் எழுதல் வேண்டா. மற்றவர்களைப் போல் விதியும் நம்வயின் அநீதியியற்றுவதாகத் தோன்றுவதனைத்தும், மேடர்லிங்க் இன்றியமையா வாசகங்களால் இயம்பியுள்ளபடி, நாம் மற்றவர்களுக்கு இழைக்க விரும்புகின்ற அநீதிகளின் பிரதிபிம்பங்களே. இதனையே சீதாபிராட்டி, "அளியள்செய்த தீவினையே அன்றில்லாக வந்தாயோ" என விளம்பிப் புலம்புவாள். இதுவன்றி, விதிதான் அநீதியாகவே நிகழ்கின்றது என்றே வைத்துக்கொள்ளினும், அதனையே மேடர்லிங்க் உரைத்தவண்ணம், தாம் நீதிபிறழா நெறியினராதற்கு உறுதியாய காரணமாகக் கொள்வார் வித்தகர்.

தமிழ்ப் பாடம் 23.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[427-வது பக்கத் தொடர்ச்சி]

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்
[னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 120.

அன்வயம்:—மின்நிறத்துச் செய்யதாள் வெள்ளைச் சிறைஅன்னம் செம்கலப் பொய்கைவாய்ப் போவதே போன்று, பொன்னின் மடப்பாவை, மன்னர் விழித் தாமரை பூத்த மண்டபத்தே, போய்ப் புக்காள்.

பதவுரை.

மின் - மின்னலினது
நிறத்து - ஒளியை உடைய
செய்ய - சிவந்த
தாள் - கால்களையும்
வெள்ளை - வெண்மையான
சிறை - இறகுகளையும் உடைய
அன்னம் - ஓர் அன்னப்பறவை
செம் - சிவந்த
கமலம் - தாமரைமலர்கள் பூத்த
பொய்கைவாய் - தடாகத்தினிடத்தில்
போவதே - போவதையே
போன்று - போல,
பொன்னின் - இலக்குமியைப்போன்ற
மட - இளமைபொருந்திய
பாவை - பதுமையை ஒத்த தமயந்தி
மன்னர் - அரசர்களுடைய
விழி - கண்களாகிய
தாமரை - தாமரைகள்
பூத்த - மலர்ந்த
மண்டபத்து - மண்டபத்தில்
போய் - போய்
புக்காள் - புகுந்தாள்.

விளக்கம்:—தமயந்தியை அன்னமாகவும், மண்டபத்தைத் தடாகமாகவும், அங்கிருந்த அரசர்களது மலர்ந்து நோக்குங் கண்களைத் தாமரையாகவும், இக்கவி வருணித்திருக்கின்ற அழகு கருதத்தக்கது. அன்னம் தடாகத்தில் போவதைப்போல் தமயந்தி மண்டபத்திற்குள் போயினள் என்று கூறுகின்றபடியால் இச்செய்யுளில் உவமை அணி அமைந்திருக்கின்றது. விழித்தாமரை, என்பதுமாத்திரம் விழி ஆகிய தாமரைஎனவிரிந்து, விழியே தாமரைஎனத் தோற்றுவித்தலால், உருவகம்.

ஒன்றிற்கு மற்றொன்று உவமையாவது மூன்று காரணங்களால் நேரலாம். மேகம் போன்ற கூந்தல், பால் நுரைபோன்ற வெண்துகில்; புலியைப்போல் கொடியவன்; என வரும்போது மேகத்திற்கும் கூந்தலுக்கும் பொதுத்தன்மை ஏற்படுவது கருமை என்னும் குணத்தினால் அல்லவா. அவ்வாறே நுரைக்கும் துகிலிற்கும், வெண்மை நண்மை என்னும் குணங்களால் பொருத்தம் காண்கிறோம். அப்படியே புலிக்கும் கொடியவனுக்கும் பொதுக்குணம் கொடுமை. குணம் என்றாலும் பண்பு என்றாலும் ஒரே அர்த்தம். இப்படிக் குணத்தைப்பற்றி வருகின்ற உவமைகளைப் பண்பு உவமை என்பர்.

இனிப், புலியைப்போல் பாய்ந்தான்; மயில்போல் நடந்தாள்; பேயைப்போல் ஆடினாள், என வரும் உவமைகளை நோக்கினால், பாய்தல் நடத்தல் ஆடல் ஆகிய தொழில்களால்பொதுத்தன்மை ஏற்படுவது தெரியும். இவ்விதம் வருவன தொழில் உவமை.

விளைகின்ற பயனை நோக்கி இரண்டு விடயங்கள் ஒன்றிற்கு ஒன்று உவமையா யமைதலும்கூடும். பால் போன்ற சொல்லாள், மேகம் அன்ன ஈகையான், தீ ஒத்த செய்கையான், என்பன போன்ற உவமைகளைப் பார்ப்போமானால், பால் அருந்தினவர் பெறும் பயனாகிய ஓர் இனிமையை அவள் சொல்கேட்டு அடையலாமென்றும், மேகத்தினிடத்தில் பெறும் பயனை இவனிடத்தில் பெறலாமென்றும், தீயினால் வரும் துன்பப்பயன் இவன் செய்கையால் வரும் என்றும் தெரிகின்றது. இவ்வாறு பயனைக் கருதி உவமை ஆவன, பயன் உவமை.

ஆதலால் பொதுத்தன்மை ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களை மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால் உவமைகள் மேற்கூறிய மூன்று வகைகளுக்குள் அடங்கும். இந்தச் செய்யுளில், பொன்னின் மடப்பாவை - இலக்குமியைப்போன்ற அழகு பொருந்திய தமயந்தி- என வந்திருப்பது அழகு என்னும் குணம்-பண்பு பற்றி நேர்ந்ததால் அது பண்பு உவமை. அன்னம் போல் தமயந்தி புகுந்தாள் என்றது, தொழிலை ஒட்டி வந்ததால், தொழிலுவமை.

பண்பு உவமை, தொழில் உவமை, பயன் உவமை என்னும் இப்பாகுபாடு, உவமைகள் அமைகின்ற காரணம் பற்றி உண்டாயிற்று. எக்காரணம்பற்றி உவமையானும் அந்த உவமையை அமைக்கின்ற சொல்லைக் கொண்டு உவமைகளைத் தொகை உவமை, விரிஉவமை என வேறு இரண்டு விதமாகவும் பிரிக்கலாம். அதனை வேறு இடத்தில் விளக்குவோம்.

குறிப்பு:—1. பாவை:—பதுமை என்னும் அர்த்தத்தைத் தரும் இச்சொல், இங்கே அந்தப் பாவை போன்ற தமயந்தியைக் குறித்து நிற்பதால், அது உவமை யாகுபெயர்.

2. ஓ என்பது ஒரு இடைச்சொல் என்றும் அது பெயர்ச்சொல்லோடாவது வினைச்சொல்லோடாவது சேர்ந்து வருங்கால் பலவித பொருள்களைத்தரும் என்றும் முன்னே கூறினோம். (364, 387, 403-வது பக்கங்கள்) ஏ என்பதும் ஒரு இடைச்சொல். இது நான்கு விதமான பொருளில் வரும். (a) இவனே என் மகன் என்னும்போது, 'மற்றவர்களல்லர் என்மக்கள். இவன் தான் என் மகன்', என்று வேறு பிரித்துக் காட்டுவதால், இங்கு ஏகாரம் பிரிநிலை (பிரித்து நிறுத்துதல்) பொருளில் வந்தது. (b) வந்தவன் இராமனே? என்னும் போது, ஒவ்வொரு சமயம் ஏகாரத்திற்கு வினாப் பொருளும் உண்டு. ஆயினும், இது மற்றப் பொருள்களோடு மயங்கக்கூடுமாகையால், வந்தவன் இராமனோ அல்லது இராமனா என்று வினவுவதுதான் இயற்கை.

(c) நாலேகால் ரூபாய், அல்லது காலே அரைக் காலே வீசம் - என வரும்போது நாலு ரூபாயும் கால் ரூபாயும், என்றும், கால் ரூபாயும் + அரைக்கால் ரூபாயும் + வீச ரூபாயும் (= 7 அணா) என்றும் எண்ணுவதற்கு ஏ உபயோகப்படுவதால், அதற்கு எண்ணுதல் பொருளும் உளது. இரண்டுகோடியே ஐம்பது லக்ஷத்து........என வருவதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

(d) பொய்சொன்னால் புழுக்குமே வாய்; மாதர் கற்பினால் பெய்யுமே மழை; இவைகளில், சந்தேகத்தை ஒழித்து நிச்சயம் என்று தேற்றுகின்றபடியால், ஏகாரத்திற்கு இருக்கும் பொருள், தேற்றப்பொருள்.

பொருள்கள் இந்த நான்கு ஆனாலும், ஏ காரத்தால் செய்யுளின் ஓசை நடைபெருகிற பயனுமுண்டு அப்பொழுது அதனால் பொருள் வேறுபாடு ஒன்றும் ஏற்படுவதில்லை. பாட்டின் சப்தம் மாத்திரம் பூர்த்தியாகும். இப்படிப் பாட்டில் பொருளில்லாமல் ஓசை நிறைவதற்கு மாத்திரம் வருகின்ற இடைச்சொற்களுக்கு அசை என்று பெயர். அசையாக வருகின்ற இடைச்சொற்கள் பல உள. அவைகளுள் ஏகாரம் ஒன்று. பாட்டினுடைய ஓசையை அசைக்க வருவதால் அசை என்று அழைக்கப்படுகின்றது.

இந்தச் செய்யுளில், மண்டபத்தே, என்பதிலுள்ள ஏகாரம், பிரிநிலை வினா எண் தேற்றம், என்னும் ஒரு விதமான பொருளும் விளக்காமல், ஓசையைக் கருதி மாத்திரம் வந்திருப்பதால், அது அசை. போவதே, என்பதிலுள்ள ஏகாரத்தையும் அசை என்றாவது கொள்ளலாம், அல்லது, தமயந்தி அங்குப் போனது ஒரு பெண் மண்டபத்திற்குள் போவதுபோல இல்லை, ஒரு அன்னம் வாவியில் போவதுபோல இருந்தது என்னும் பொருளைத் தரக்கூடுமாகையாலும், இது பிரிநிலை ஏகாரம் எனவுஞ் சொல்லலாம். இப்பொருளில், போவதே என்பதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்து, அன்னம் என்பதுடன் கூட்டி, 'அன்னமே' என ஆக்கிக் கொள்ள வேண்டும்.

—

வடங்கொள் வனமுலையாள் வார்குழன்மே லோடு
நெடுங்கட் கடைபார்த்து நின்று—னிடங்கண்டு
பூவாளி வேந்தன்றன் பொன்னுவம் பின்னேயிட்
டேவாளி நாணின்மே லிட்டு. 121.

கருத்து:—தமயந்தி இன்னவாறு மண்டபத்துள் வரவும், அவள் யாரைக்கடைக்கண்ணால் பார்க்கின்றாளோ அவரைத் தன் பாணத்தால் அடிக்கும்பொருட்டு மன்மதன் சித்தமாய்க் காத்துக்கொண்டிருந்தான்.

சுயம்வரம் இருவிதம். ஒன்று, வந்திருக்கும் மன்னர்களுள் ஒருவனை அரசகுமாரி தானே நேரில் தேர்ந்து விவாகம் செய்துகொள்ளுதல். மற்றொன்று, இன்னவொருகாரியத்தைச் சாதித்தவன் யாவனோ அவனையே இவள் மணப்பதென்று காட்டுவது ஆகும். சீதை, துரோபதை ஆகியவர்களுடைய சுயம்வரம் இப்பின்னதற்கு உதாரணம். தமயந்தியின் சுயம்வரம் முதல்சொன்ன வகையைச் சேர்ந்ததாகும். இதன்படி, அரசகுமாரியுடன் வந்த அவள் உயிர்த்தோழி அவளுக்கு அங்கு வந்திருக்கின்ற அரசர்கள் ஒவ்வொருவரையும் பேர் குலம் செல்வம் ஆற்றல குணம் இவைகளைச்சொல்லி அறிமுகம் செய்துவிக்க, யாவும்கேட்டபின் அக்குமரி தனது மனம் நாடிய வண்ணம் ஒருவனுக்கு மாலையிடுவது வழக்கம். இனிவரும் பதினேழு செய்யுள்கள் ஒவ்வொரு அரசனுடைய தோழி தமயந்திக்கு வருணித்துச் சொல்வதைப்பற்றிக் கூறுகின்றன. அவைகளை நாம் இப்பாடத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லையாகையால் பொருள்முதலியன கூறாமல் செய்யுளைமாத்திரம், தொடர்ச்சி அறாதபடி எழுதிவைப்போம்.

—

மன்னர் குலமும் பெபரும் வளநாடு
மின்ன பரிசென் றியலணங்கு— முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
டேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 122.

சோழ மன்னன்.

பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவுந் திருநாடன்—பொன்னிற்
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றன்னார்
கணங்கவிழ்ந்த வேலனிவன் காண். 123.

பாண்டிய மன்னன்.

போர்வாய் வடிவேலாற போழப் படாதோருஞ்
சூர்வாய் மதாரிக்கட் டோகாய்கேள்—பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற்
றிரித்ததோ விங்கிருந்த சேய். [சென்டாற்

சேர மன்னன்.

வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்
குன்றருவி பாயுங் குடநாட—னின்றபுகழ் [போல்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து. 125.

யதுவமிச மன்னன்.

ஆழி வடிம்பலப்ப நின்றானு முன்னொருகா
லேழிசை நூற் சங்கத் திருந்தானு—நீள்விசும்பி
னற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செறறானுங் கண்டாயிச் சேய். 126.

குறிப்பு:—பாரதப்போர் நிகழ்வதற்கு வெகுகாலம் முன்னரே நளன்கதை நடந்திருக்க இங்குக் கூறுவது காலம் பிறழ்ந்த குற்றமாம் (anachronism).

குருநாட்டரசன்.

தெரியி லிவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
யரவின் பசுந்தலையென் றஞ்சி—யிரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன். 127.

மத்திரநாட் டரசகுமாரன்.

தேமருதார்க் காளை யிவன்கண்டாய் செம்மலர்மேற்
காமருசங் கீன்ற கதிர்முத்தைத்—தாமரைதன்
பத்திரத்தா லேற்கும் படுகர்ப் பழனஞ்சூழ்
மத்திரத்தார் கோமான் மகன். 128.

மச்சதேசத் தரசகுமாரன்.

அஞ்சாயன் மானே யிவன்கண்டா யாலைவாய்
வெஞ்சாறு பாய விளைந்தெழுந்த—செஞ்சாலிப்
பச்சைத்தாண் மேதிக் கடைவாயிற் பாலொழுகும்
மச்சத்தார் கோமான் மகன். 129.

அவந்தி மன்னன்.

வண்ணக் குவளை மலர்வௌவி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை—யுண்ணு
தருங்கடா நிற்கு மவந்திநா டாளு
மிருங்கடா யானை யிவன். 130.

பாஞ்சால வேந்தன்.

விடக்கதிர்வேற் காளை யிவன்கண்டாய் மீனின்
றொடக்கொழியப் போய்நிமிர்ந்த தூண்டின்—
[மடற்கமுகின்
செந்தோடு பீறித்தேன் செந்நெற் பசுந்தோட்டில்
வந்தோடு பாஞ்சாலர் மன். 131.

கோசலத் தரசன்.

அன்னந் துயிலெழுப்ப வந்தா மரைவயலிற்
செந்நெ லரிவார் சினையாமை— வன்முதுகிற்
கூனிரும்பு தீட்டுங் குலக்கோ சலநாடன்
றேனிருந்த சொல்லாயிச் சேய். 132.

மகதமன்னன்.

புண்டரிகந் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல்
வண்டிரியுந் தெண்ணீர் மகதர்கோ-னெண்டிசையிற்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்னுவம் பின்
தேர்வேந்தன் கண்டாயிச் சேய். [னுடைய

அங்கநாட் டரசன்.

கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்-வான்கடல்வந்
தந்தோ வெனவெடுக்கு மங்கநா டாளுடையான்
செந்தேன் மொழியாயிச் சேய். 134.

கலிங்கநாட் டரசன்.

வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்—புள்ளோடு
வண்டிரியச் செல்லு மணிநீர்க் கலிங்கர்கோன்
றண்டெரியற் றேர்வேந்தன் றான். 135.

கேகயநாட் டரசன்.

அங்கை வரிவளையா யாழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்போய்க் - கங்கை
[யிடைச்
சேல்குளிக்குங் கேகயர்கோன் றெவ்வாடற் கைவரை
வேல்குளிக்க நின்றானிவ் வேந்து. [மேல்

காந்தார வேந்தன்.

மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகு மன்னந் தனிக்கயிற்றிற்—போநீள்
கழைக்கோ தையரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன். 137.

சிந்துநாட் டரசன்.

அங்கை நெடுவேற்க ணாயிழையாய் வாவியின்வாய்ச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச்—செங்கமலப்
பூச்சிந்து நாட்டேறல் பொன்விளைக்குந் தண்பணை
மாச்சிந்து நாட்டா னிம்மன். [சூழ்

இன்னவாறு சேடி, தமயந்திக்குக்காட்டிவரும் அம்மண்டபத்தே இந்திரன் வருணன் அக்னி எமன் ஆகிய நான்கு தேவர்களும் நளனுடைய உருவத்தை எடுத்துக்கொண்டுஉட்கார்ந்திருப்பதைக்கண்டு அவள் கலங்கினாள் என்பதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

—

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாண் மற்றவரைக் காணாநின்
றாசலா டுற்றா ளாம். 139.

குறிப்பு:—காணா, என்பது இங்குக் கண்டு எனும் பொருளில்வந்த உடன்பாட்டு வினையெச்சம். (50-வது 166-வது பக்கங்கள் பார்க்க).

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 3. கிளிப்போர்

[429-வது பக்கத் தொடர்ச்சி]

அண்ணன்மார் கட்டிச்சாதம் உண்டபின் ஆட்களுடன் ஆற்றங்கரையோரமாக நடந்து, மூங்கில் வனத்தைக் கடந்து ஆலமரத்தைக் கண்ணுற்றனர். பெரியண்ணனையும் வேட்டையாள்களிற் பலரையும் மூங்கில்வனத்தில் மறைவாக நிறுத்திவைத்து, சின்னண்ணனும் வலைஞர் சிலரும் ஓசை கேளாமல் நடந்து ஆலமரத்தை யணுகி நாற்புறமும் மரத்தின்மேல் வலை வீசினர். வீச்சொலியையும் கூண்டுகள் முறிதலையுங் கேட்டுக் கிளிகள் கண்விழித்து மயங்கின; மறுகணத்தில் அவைபாவும் வலைகளில் அகப்பட்டன.

கிளிகளுக்குக் காவலிருந்த வேங்கை அன்று இரை தேடி நெடுந்தூரஞ் சென்றிருந்தமையால் கிளிகளுக்கு நேர்ந்த கேட்டை அது அறிந்திலது.

சின்னண்ணசாமி பொற்கூட்டோடு மரமேறினான். கிளிகள் மருண்டு மேலே பறந்தெழுந்து மீண்டும் வலைகளினுள்ளே வீழ்ந்தன. சின்னண்ணன் பொற்கிளியைப் பொற்கூட்டிலே அடைத்து மூடி, கூட்டைப் பெரியண்ணன்பாலனுப்பிவிட்டு, கிளைகளிற் பற்றியிருந்த வலைகளை யெடுக்கும்பொருட்டு மற்றுஞ் சிலரோடு வேறு கிளைகளுக்குச் சென்றான். எண்ணிறந்த கிளிகள் வலைகளிலே தொங்குதலைக் கண்டு அவற்றைப் பற்றிப் பற்றிக் கீழே எறிந்தனர். அக்கிளிகள் நிலத்தில் விழுமுன் சிறகுகளை விரித்துச், 'சின்னண்ணா, நீ எங்களரசியைச் சிறைகொண்டாய். நாங்கள் வீரதங்காளின் கிளிகள் என்பது உண்மையாயின், சிறைக்குச் சிறைமீட்போம்' என்று சொல்வனபோல்கத்திப் பொள்ளெனப் பறந்து வானத்தை மறைத்து வீரதங்காள் அரண்மனையை நாடிப் போயின.

பின்பு சின்னண்ணன் வலைஞரோடு திரும்பி மூங்கில்வனத்தை யடைந்தான். தாம் வந்தகாரியம் இனிது முடிந்ததென்று அண்ணன்மார் மகிழ்ச்சியுற்று, தம் ஆட்களோடு சிற்றூலைப்பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் அம் மூங்கில்வனத்திற் பாதிவழியைக்கடந்து செல்கையில் பொன்னர் சங்கரை நோக்கி, 'தம்பி, ஆலமரத்தினடியில் ஒரு புலி கிளிகளுக்குக் காவல்புரியும் என்று தங்கை சொன்னாளே; அந்தப் புலி நம் கண்ணிற் படவில்லையே. அது எங்கே போயிற்று?' என்று வினவவும், தம்பி வாய்திறந்து மறுமொழி கூறுமுன் அப்புலி அங்கே தோன்றிற்று.

இரைதேடச் சென்றிருந்த வேங்கைப்புலி திரும்பி வந்தவுடன் கிளிகளைக் காணாது கோபங்கொண்டு கொட்டாவிவிட்டுக் குறுவிழி விழித்து, வாலை யசைத்து, அங்குமிங்கும் பார்த்து, மனிதர் காற்சுவடுகளைக்கண்டு மோப்பம்பிடித்து, சின்னண்ணன் சென்றவழி போ

டிப் பாய்ந்துவந்து, சின்னண்ணன் கையில் பொற்கிளி கூட்டிலிருக்கக்கண்டு, 'அடே, சின்னண்ணு, நில், நில். நீ மீசைமுளைத்த ஆண் பிள்ளையா? உன் திறம் நன்று நன்று! நானில்லாத வேளைபார்த்து வந்து இந்தக் கிளியைப் பற்றிக் கொண்டாயோ?' என்று சொல்வதுபோல் குமுறி, அவன்மீது பாய்ந்தது. ஆட்களிற் பலர் ஓடி ஒளிந்தனர். சின்னண்ணன் கிளிக்கூட்டைப் பொன்னர்கையிற் கொடுத்து, குத்தீட்டி யெடுத்து வேங்கையை எதிர்த்தான்.

சின்னண்ணனுக்கும் புலிக்கும் அன்று பகல்முழுவதும் போர்நடந்தது.

வேங்கை பதுங்குகையில் சின்னண்ணனும் பதுங்குவான்; அது சுற்றுகையில் அவனும் சுற்றுவான்; ஒரு கணப்பொழுதேனும் அவன் தன் முதுகை வேங்கைக்குக் காட்டினவனல்லன்; புலி குறுக்கே திரும்புகையில் அதன் உடலில் ஈட்டியைப் பாய்ச்சுவான்; அது அவன் தலைக்குமேல் எழும்பிப் பாய்கையில் சின்னண்ணன் மண்டியிட்டு உட்கார்ந்து ஈட்டியால் அதன் அடிவயிற்றிற் குத்துவான்; அது பதுங்கி யிருக்கையில் அவன் அதன் தலைக்குமேற் பாய்ந்து சென்று, அது தன் உடலைத் திருப்பிக்கொள்ளுமுன் வாற்புறத்தில் ஈட்டியைப் புதைப்பான். புலிக்கு உடல்முழுதும் புண்கள் உண்டாயின. அப்புண்களினின்றும் இரத்தம் பெருக்கெடுத்துப் போர்க்களத்தை நனைத்தது. சினப் புலியும் இளைத்ததன்று, சின்னண்ணனும் இளைத்தவனல்லன். பெரியண்ணசாமி வேடிக்கைபார்த்து நின்றார். கூட்டிலிருந்த பொற்கிளி வேங்கைக்குப் பல கூறுவதுபோல் கியகியவென ஓயாமல்பேசிற்று. இதற்குள் பொழுதும் வீழ்ந்தது.

பார்த்தான் சின்னண்ணன். இந்தப்புலியோடு இவ்வளவு நேரம் பொருவது தன் ஆண்மைக்குக் குறைவென் றெண்ணினான். எண்ணின மாத்திரத்தில் தன் கையிலிருந்த குத்தீட்டியை வீசியெறிந்து, 'வெறுங் கையோடு போர்புரிகின்றேன், வா' என்று அறைகூவித் தன் தொடைகளையும் தோள்களையும் தட்டி யார்ப்பரித்தான். ஈட்டியில்லாமையை உணர்ந்த புலி அதுவே சமயமென்று சின்னண்ணன் மார்பின்மீது பாய்ந்தது. அது பாய்கையில் சின்னண்ணன் தரையின்மேல் குப்புற வீழ்ந்து, வேங்கையின் அடிக்குத் தப்பி, சரேலென எழுந்திருந்து அது திரும்புமுன் அதன் மேல்வாயையும் கீழ்வாயையும் தன் கைகளாற்பற்றிப் பிளந்தான். வேங்கை இடிபோல் குமுறி மாண்டது. அது விட்ட பேரோசை 'உனக்கபயம் உனக்கபயம்' எனத் தலையூரில் வீரதங்காளின் காதில் வீழ்ந்தது.

பின்பு அண்ணன்மார் சிற்றுலைப்பட்டணத்துக்குச் சென்று, தாங்கள் கொண்டு வந்த பொற்கிளியையும் மயில் குயில் புறா மான் முதலியவற்றையும் தங்கைக்களித்து, அவள்பால் விடைபெற்றுத் தங்கள் அரண்மனையை அடைந்து, குளித்து விருந்துண்டு, படுத்துக் களைப்பால் அயர்ந்து தூங்கினர்.

ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[407-வது பக்கத் தொடர்ச்சி]

8. சிற்றிற் பருவம்.

அரிக்கிண் கிணிப்பொற் சதங்கைதண்டை
யலம்பத் துவசம் வளைவயிரம்
அம்போ ருகமங் குசந்திகிரி
யாதி யிரேகை நிலம்பொறிப்ப
விரிக்குஞ் சுருதி தலைவிளக்காய்
விளங்கு திருத்தாள் சிவப்பதன்றி
மிகவும் புழுதி படவடிகள்
மெல்ல நடந்து வருவதுதான்
தரிக்கு மடமைச் சிறுதகையோர்
தருவெம் பாவைக் கமுதளிப்பான்
சமைத்த புளினச் சிறுவளைப்பைத்
தகர்க்கும் படிக்கோ தவமுனிவோர்
தெரிக்கும் பெருமைப் பரம்பொருளே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே. 1.

வஞ்சப் புணர்ப்பிற் சகடமன்றே
மாயா விராத னுடலமன்றே
மாமக் கொடியோன் சிரமன்றே
வளர்துங் துமியி னெலும்பன்றே
கஞ்சப் பதத்தா லடர்ப்பதற்குக்
கருதுண் மணலைக் கொழித்தெடுத்துக்
கடவா சனும்பே ரரங்குமிடைக்
கழியுஞ் சிறுசோ றடுமிடமும்
விஞ்சச் சமைத்துச் சுவர்வளைத்து
விரவிப் பலபே தைமைமடவோம்
விளைபாட் டிடத்தைக் கலைப்பதற்கு
விதியோ விதியைப் படைத்தவுந்திச்
செஞ்சக் கரக்கைப் பாஞ்சுடரே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே. 2.

நறைகோட் டலர்மென் பொகுட்டுறையு
நல்லா ளுவப்ப வெழுதீவும்
நன்கு வளைந்த கடலேழும்
நவெண் வளைத்தீங் கிதைவளைப்பக்
கறைகோட் டுலோகா லோகவரைக்
கற்பித் திவ்வா றகிலாண்டங்
காட்டி யிருவீர் விளையாடக்
கருது மதற்கு மாறன்றே
பறைகோட் டவுணப் பெருப்புணரி
பசையற் றலைக் கரிபரிதேர்
பஞ்சிற் கிரிவெஞ் சூறையினிற்
பறக்கு மவைபோற் றிசைசிதறச்
சிறைகோட் டலைப் புள்வலவா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே. 3.

குருளுஞ் சிறிது முடிகூடா
கொலையுங் களவும் விழிபயிலா
கொங்கைத் துணையும் புனலிலெழும்
குமிழி யெனமார் பிடையரும்பா
மருளு மருளுந் தரநகைக்கும்
வண்ணந் தெரியோம் பதிலுரைக்கும்
மாற்ற மில்லோம் குறிப்புணரு
மனமும் படையேம் மதனிருபன்
அருளுந் தனியா ணையைமதியோம்
அறிவில் மடவேங் குழாத்தணுகி
அடிகேள் குறும்பு செயத்துணிந்தா
லாகத் திருப்பா ணகையாளோ
தெருளுந் தவத்தோர்க் கருமருந்தே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே. 4.

மகரப் பரவை குண்டகழி
மதிலே முடைத்தென் னிலங்கையெனும்
வளமா நகரைக் கலைப்பதற்கு
வயவா னரத்தைச் செலவிடுத்தாய்
நகரத் துயர்ந்த புரமூன்றும்
நலியப் பகழி யுருவெடுத்தாய்
நரகன் புரியும் வாணனுள
நகருங் குலையப் புள்ளூர்ந்தாய்
பகரக் கடிய நெடுந்தூரம்
பரந்த கிராத பதிசிதையப்
பகழி துரந்தா யவர்களைப்போல்
பகைப்பக் கருதேல் பழவடியேம்
செகரத் தினமே யருட்கடலே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்த்
தேவே சிற்றில் சிதையேலே. 5.

வேறு

வாலி படக்கடு வாளி மறைப்பில் விடுத்ததும் [தும்
மாமுனி சொற்கொடு தாடகை யைப்பொருதட்ட
கோலி யமர்த்தலை யோரடி யிற்பட வைத்ததும்
கோவியர் சிக்க நெய்பா றிருடிப் புடைபட்டதும்
காலி துரத்திய கீழ்மையு மற்றுமு ரைக்கிலம்
காதலு னக்கடி யோமுன டைக்கல மிற்றைநாள்
வேலிப யிர்த்தெறு மோசொல் சிதைத்திடல் சிற்றிலே
வேணுவ னத்துறை வாண சிதைத்திடல் சிற்றிலே. 6.

ஆதி முதற்பிர மாவென வெப்புவ னத்தையும்
ஆக விதித்தனை நீயென முற்று மளித்தனை
பூதி யுடற்சடை யோனென முற்று மழித்தனை
போத வுனக்கிது வேதொழி லெப்பொழு துக்குமேல்
வீதி யினிற்சிறு சோறட வைத்த அடுப்புநீள்
வீடு மமைத்தவெ மாடல் கலைப்பது மொக்குமே
வேதிய நக்கனு கூலசிதைத் திடல் சிற்றிலே
வேணு வனத்துறை வாண சிதைத்திடல் சிற்றிலே.

ஓடும் நதிப்புன லாடும் விருப்பி னிடைச்சிமார்
ஓகையி னுற்றுடை யாடை கரைக்கு ளிருந்தநீ
கோடுடை நற்றரு மேலதை முற்று மெடுத்துமேற்
கோடலு மறவர் நாணி யிரக்கவு முட்கொளாய்
பாடு படுத்தினை யாமவ ரொப்ப நினைத்திடேல்
பாத மிசைச்சர ணாகதி யுற்றவ வர்க்கெலாம்
வீடு கொடுக்கும் விநோத சிதைத்திடல் சிற்றிலே
வேணு வனத்துறை வாண சிதைத்திடல் சிற்றிலே.

பூவைகி ளிக்குமுன் நாம முரைக்க வருத்தினோம்
பூமலர் பட்டணி காலையு மக்கிதெனச் சொல்வோம்
பாவை பொருட்டடு சோறு படைப்பது னக்குமுன்
பாடு மிடத்தினு மாடு மிடத்தினு மற்றினும்
சேவை யுனைப்புரி வோமடி மைக்குடி முற்றும்யாஞ்
சேவடி யிற்பரல் நோக வுறுத்தனி னைக்கிலோம்
மேவ லருக்கெதிர் கால சிதைத்திடல் சிற்றிலே
வேணு வனத்துறை வாண சிதைத்திடல் சிற்றிலே.

காலை முறுக்கவிழ் வாரிச மொத்த கடைக்கணை
காண வெமக்குமுன் னாசை பெருத்தது ரைக்கிலோம்
மாலை மதுச்சொரி மார இமைப்பிலர் பக்கமாய்
வாணன் முதற்றயி தேய குலக்களை கட்டவா
சேலை மறுத்தகண் மாமகள் செப்பு முலைக்குளே
தேசு விரித்திடு நீல நிறத்த இரத்தனமே
வேலை மதித்தகை யாள சிதைத்திடல் சிற்றிலே
வேணு வனத்துறை வாண சிதைத்திடல் சிற்றிலே.

சிற்றிற்பருவ முற்றிற்று.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[434-வது பக்கத் தொடர்ச்சி]

(iv) பிரமை.

உலக வழக்கில் பிரமை என்பது பித்தம். ஒன்றையொன்றா யறியும் புத்திமாறாட்டம். ஆயினும் தர்க்கத்தில் இதற்கு நேர் விரோதமான பொருள் பிரமைக்குக்கொடுப்பார். இந்திரிய முதலியனவற்றால் யாதொரு குற்றமும் நேராததன்மையி லுண்டாகும் ஞானம் பிரமை யெனப்படும். அத்தகைய குற்றங்கள் பின்வருமாறு:—

I. பிரத்தியட்சப் பிராந்தியி னுற்பத்தியில் குற்றம் நேத்திர முதலியவற்றின் மஞ்சள்காமாலை தோஷமும், விஷயத்தின் சாதிருசிய தோஷமுமுதலியன - இதை அப்பர் உருவகப்படுத்தி,

காமாத் தம்மெனுங் கார்வலைப் பட்டுநான்
போமாத் தையறி யாது புலம்புவேன்
ஆமாத் தூரா னேயென் றழைத்தலும்
தேமாத் தீங்கனி போலத் தித்திக்குமே

திரு ஆமாத்தூர்—திருக்குறுந்தொகை 3.

II அனுமிதிப்பிராந்தியி னுற்பத்தியில் குற்றம் அசித்த முதலிய ஏதுப்போலியாம்:—

குண்டாக்க னாயுழன்று கையி லுண்டு
குவிமுலையார் தன்முன்னே நாண மின்றி
உண்டியுகந் தமணே நின்றார் சொற்கேட்
டுடனாகி யுழிதந்தே னுணர்வொன் றின்றி
வண்டுலவு கொன்றையங் கண்ணி யானை
வானவர்க ளேத்தப் படுவான் றன்னை
எண்டிசைக்கும் மூர்த்தியாய் நின்றான் றன்னை
யேழையே னான்பண் டிகழ்ந்த வாறே.

திருவதிகை வீரட்டானம்-ஏழைத் திருத்தாண்டகம் 7.

III. உவமிதிப்பிராந்தியி னுற்பத்தியிற் குற்றம் பிராந்தி சகித ஒப்புமை ஞானமாம்.

பேசப் பொருளிலாப் பிறவி தன்னைப் [மீண்டு
பெரிதென்று சிறுமனத்தால் வேண்டி
வாசக் குழன்மடவார் போக மென்னும்
வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே
தூசக் கரியுரித்தான் தூநீ ருடித் [கில்லா
துழைத்திலங்கு நூல்மார்பன் தொடர
நீசர்க் கரியவன் நெய்த்தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய லாமே.
திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 7.

IV. சப்தப் பிராந்தியி னுற்பத்தியிற் குற்றம், கேட்போனிடத்து வாக்கிய தாற்பரியத்தைக் கிரகிக்காமையும், கூறுவோனிடத்து வஞ்சகத்தன்மை முதலியனவும், சப்தத்திற் பிறிதோர்வகையில் போதிக்குந்தன்மை முதலியன வாம்.

ஈசனையெவ் வுலகினுக்கும் இறைவன் தன்னை
இமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய்
நேசனை நித்தலும் நினையப் பெற்றோம் [கின்ற
நின்றுண்பா ரெம்மை நினையச் சொன்ன
வாசகமெல் லாமறந்தோ மன்றே
வந்தீரார் மன்னவனு வான்றா னோ?
திருமறுமாற்றத் திருத்தாண்டகம் 8.

மேற்கூறிய குற்றங்கள் ஒன்றுமின்றி இந்திரியம் முதலியவற்றா லுண்டாகும் ஞானமே "பிரமை" என்று மொழியப்படும். பிரத்தியட்சப்பிரமையின் உற்பத்தியில்குணம் (சிறப்பு) விஷயத்தின் அதிகதேசத்தில் இந்திரியங்களின் சையோகம் நேர்வது. அநுமிதிப்பிரமையினுற்பத்தியில் குணமெனப்படுவது; சாத்தியத்தின் வியாப்பியமான ஏதுவின் சாத்தியமுடைய பட்சத்தில் அறிவு. உவமிதிப்பிரமையின் உற்பத்தியில் குணமாவது மெய்யான ஒப்புமையில் அறிவு செலுத்தல், சாப்திப்பிரமையி னுற்பத்தியில் குணம், மெய்யான தகுதி முதலியவற்றின் அறிவு. இவ்வாறு ஞானத்தின் பிராமாணியத்தி னுற்பத்தியாம்.

பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்அமு தாயவ னேகம்பம்
குறிப்பி னுற்சென்று கூடித் தொழுதுமே.
திருவேகம்பம் - திருக்குறுந்தொகை 4.

(v) ஞானமும் பிரமாணியமும்,

ஞான தருமமாகிய பிராமாணியத்தைக் கிரஹிப்பது ஞானத்தை கிரஹிப்பதின் வேறன்று. ஞானத்தைக் கிரஹிப்பதிலும், வேறுகாரணத்தை விரும்பாமலிருக்கும் தன்மையேதான் பிராமாணியத்திற்குச் சுதஸ்துவம் (அல்லது தன்னால் துணிதல்) என்னும் தன்மையாம்.

ஞானமும் பிரவிர்த்திக்தற்கு முன்னமே கிரஹிக்கப்படும். இதனால்தான் பிரமாணிய, அப்பிரமாணிய ஐயம் உண்டாகின்றன. தருமத்தை அறியா விடத்து ஐயம் உண்டாகாது. ஆதலால் அறிவினைச் செலுத்துவதற்கு முன்னர், ஞானத்தை வேறொன்றாற் றோன்றாமை தோற்றுவித்த அருத்தாபத்தியால் ஞானங் கிரஹிக்கப்படும். அப்போது ஞானத்தை யடைந்த பிரமாணியமும் அருத்தாபத்தியாலே கிரஹிக்கப்படும். [ஞானத்தை யென்பது விஷயத்தோடு கூடியதாயும் ஞானத்தா லுண்டாவதாயுமுள்ள வேறு பதார்த்தம்.]

ஞானத்தினது பிராமாணியம் ஞானத்தைக் கிரஹிக்கும் பிரமாணத்தினாலே கிரஹிக்கப்படுமென்பது விதிகோடி யென்றும், அது ஞானத்தைக் கிரஹிக்கும் பிரமாணத்தாலும்வேறாகிய பிரமாணத்தாலும்கிரஹிக்கப்படுமென்பது நிஷாதகோடி யொன்றும் சொல்லப்படும். விதிகோடியைப் பூர்வபட்சம் செய்து, வேதாந்திகள் நிஷாதகோடியைச் சித்தாந்தம் செய்வார். கேவல வியதிரேகி அநுமானத்தால் அப்பியாசநிலையில் உண்டான ஞானத்திற்குப் பிரமாணியம் துணியப்படும். அந்வய வியதிரேகி அநுமானத்தால் அப்பியாசத்தை யடைந்த அந்நிய ஞானத்தினது பிராமாணியம் அநுமிக்கப்படும் என்பது தர்க்கநூலார் துணிவு.

பிரமாணங்கள் முற்றும்

பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[433-வது பக்கத் தொடர்ச்சி]

3. சித்தாந்தங்கள்

ஞானமும் அறமும்.

ஏனைய பொருள்களைப்போல், மனிதனும் பிரபஞ்சத்தின் ஓர் அம்சமானவன், என்று முன்னே குறித்துளோம். மாநுடர்களின் குணம் நடத்தை இலக்ஷியங்களைப்பற்றி ஆராய்வதற்குமுன், தேகவமைப்பையும் மனப்பாங்கையும், உடல் உழைப்புக்களையும்பொறுத்தவரையிலும் மனிதனுக்கும் மற்றைப் பூதங்களுக்கும் மிகப்பெரிய வித்தியாசங்க ளில்லையென்ற விஷயத்தையும் சுருக்கமாக அறிவிப்போம்.

மேற்சொல்லிய ஓட்டவொடுக்க முறையேதான் பூதபௌதிகங்களின் மாறுதல்களுக்கும் வளர்ச்சிக்கும் காரணமாகின்றது. பருப்பொருள் ஒவ்வொன்றிலும், உடலிலும் (body) இடைவிடாமல் அம்முறை பலப்பலகதியுடன் (velocity) இயங்குகின்றது. அவ்வியக்கம் அல்லது சுழற்சியின் அளவுவேறுபாடுகளாற்றான் பருப்பொருள்களும் தேகமும் வளர்ந்தும் தேய்ந்தும் உயர்ந்தும் தாழ்ந்தும் மறைகின்றன. இவ்வோட்டவொடுக்கங்களின் சரிசம இயக்கமே ஒழுங்கு order) எனவும், சீர் (harmony) எனவும், இன்பம் (happiness) எனவும் வழங்குவதாகும்.

சரீர உறுப்புக்கள் பொதுநன்மைக்காக இசைந்து தொழில்புரிதல்போல், மானுடராசியின் அங்கங்களான மனிதர் நேர்மை வாய்மை அன்பு பரஸ்பர நம்பிக்கைகளுடன் இருந்துவர வேண்டும்.

ஞானம் என்பது வெளியிலிருந்து உட்புகுத்தப்படும் பொருளன்று. மற்று, மனதின், அல்லது அகத்தின், தூய உயரிய நிலைமையாகும் அது. ஒருவனுடைய வாழ்வின் போக்கும் தன்மையும் அவனுடைய மனப்பயிற்சியையும் ஞானவளப்பதையும் பொறுத்திருக்கின்றன. பொறிகளின் அடக்கம் மனவுறுதி ஐயந்திரிபுகளற்ற ஞானம் ஆகியவைகளின் இணக்கமே மானுடக்குணமாவது. ஒருவன் ஏற்றுப்புரிகின்ற செய்கைகளின் தன்மையும் அவனுடைய குணத்தை ஆதாரமாகக்கொண்டு விளங்குவன இவ்வாறு ஞானமும் பண்பும் குணமும் ஒன்றையொன்று பிரதிபலிக்கச் செய்வன.

இச்சை அல்லது வேட்கை (appetite), சுகம் அல்லது சந்தோஷம் (joy), துக்கம் (sorrow) என்பவைகளே உலகாதிகளனைத்தையும் பாதித்து இயக்கும் மூல அல்லது முக்கிய பிரேமைகளாவன (Primary emotions). இப்பிரேமைகளின் வசப்பட்டு உழல்பவர்களே மெய்யடிமைகளாவர். புறப்பொருள்கள் ஒருவனைத் தாக்குகையில், அகத்துள் சிற்சில மாறுதல்கள் நிகழ்கின்றன; இந் நிகழ்ச்சியுணர்வே பிரேமைஎன்பது; அல்லதுதேகத்தின் உள்ளியக்கங்களையும் நிலைமையையும் உணர்த்துவதே பிரமைஎன்னலாம். ஒவ்வொரு ஜீவனும், எக்கேடு உற்றாலும், எப்பாடுபட்டாயினும், எப்பொழுதும் நிலைத்து நிற்கவேண்டுமென இச்சிக்கின்றது. இவ்விச்சையைப் பூர்த்திசெய்வதற்கு விரும்பி முயற்சிசெய்கையில் அது புறப்பொருள்களாலும் அயலார்களாலும் எதிர்த்து அடக்கப்படுகின்றது; அல்லது விருப்பியது கிடைத்தற்குள் மிக்க துன்பங்களுக்குள்ளாக்கப்படுகின்றது. அவ்வெதிர்ப்பும் அநுபவமும் உட்சக்தியைக் கிளர்த்துகின்றன. கிளர்த்தப்பட்ட அச்சக்தியின் உயர்வுதாழ்வு, அல்லது வளர்ச்சி தேய்வுகளைப்பற்றிய உணர்வே பிரேமை. சுகம், அல்லது நன்மை என்பது அச்சக்தியின் பெருக்க உணர்ச்சியாகும்; ஒடுக்க உணர்ச்சியே துக்கம், அல்லது தீமையாகும். இப்பிரேமைகளே, இப்பிரேமைகளினின்று உண்டாகும் தொழில்களே, இத்தொழில்கள் வாயிலாக வளரும் அறிவும் அநுபவமுமே, இவ்வறிவு அநுபவங்களினின்று வெளியாகும் முடிபுகளே தோற்றவுலகு உலகாதிகளின் உள்ளக் கருத்தையும் அபேதத்தையும் அறிவுறுத்துவன இவ்விடயங்களை இனிவிரிப்போம்.

ஒருவன் தன்னுடைய மங்கியஉணர்ச்சி குறுகிய நோக்கம் சிறுகிய அநுபவங்களால் விஷயாதிகளை ஒருவாறு அறிகின்றானெனவும், இப்புல்லறிவையே பூர்ண ஞானம் முற்றுண்மை பிரபஞ்சத்தின் உள்ளப்போக்கு கசடற்ற பல்வேறு அநுபவங்களின் நற்பலன்களென மருண்டு தவறிப்படுகிறானெனவும், முன் குறிப்பிட்டோம். இன்னமும், உலகாதிகள் நன்மை பயப்பனவாதலால் அவைகளைப்பெற்று இரமித்திருக்க அவாவி உழைக்கின்றோம் என்ற கொள்கை உண்மையன்று எனவும், மற்று, நாம் ஓடித்தேடித் திரிந்து பாடுபடுவதினின்றே பொருள்கள் மதிப்புப்பெறுகின்றன என்பதே மெய்விஷயம் எனவும் முன்னர்க் கூறியுள்ளோம். தெளிவும் உறுதியும் உண்மையுமற்ற அத்தகைய பாவனையே அபிப்பிராயம் (Opinion) எனவும், கற்பனை (Imagination) எனவும் அழைக்கப்படுவது. பேராசைக்காரன் பெரும் பொருட் குவியலே மிக்க மேலான சாதனம் எனவும், மிடியோ இழிவதெனவும், சீமான் பேரும் புகழுமே விழுமிய செல்வமெனவும், அவமதிப்பும் அவமானமும் வெறுத்தற்குரியன எனவும், பொறாமைக்காரன் பிறர் பெருமையையும் ஆக்கத்தையும் பார்த்துப் பொறக்காமல் தூற்றி அவர்களைத் தாழ்த்தி இடருற்றுத் துடிக்கும்படி செய்தலே நல்லதெனவும் பாவித்துவருவதை யாவரும் அறிவர். ஒவ்வொருவனும் இவ்வாறு அவ்வவன் மனக்கற்பனைகளின் தன்மைப் படிக்குப் பிரபஞ்சாதிகளை நல்லன தீயன வெனவும், கொள்ளத் தக்கன தகாதன எனவும், உபயோகமுள்ளன அற்றன எனவும் மதித்து, முன்னவைகளைக் கொண்டு, பின்னவைகளை விடுத்துவருவதுடன் நிற்காமல், மற்றவர்களும் தன் அபிப்பிராயங்களை அங்கீகரித்து ஒழுகவேண்டுமெனவும், தான் ஒப்பியவைகளையே ஒப்பவேண்டும் எனவும், தான் விலக்குபவைகளையே விலக்கவேண்டுமெனவும் தன்னையே அனைவரும் முதல்வனென ஆமோதித்துக் கீழ்ப்படியவேண்டுமெனவும் வற்புறுத்தத் தலைப்படுகின்றான். ஒவ்வொருவனும் இவ்வாறு எண்ணி நடத்தலினின்று பிணக்கமும் வழக்கும் ஒருவரையொருவர் தன்புறுத்தலும் வெளிப்பட்டுப் பரவுகின்றன. ஆசாபாசங்களால் அலைக்கப்படும் பேதையின் குணவொழுக்கங்களும், சொல்செயற்களும் எப்பொழுதும் சலித்துமாறிக் கொண்டிருப்பனவாம் என்பதுவெளிப்படையான விஷயம். இக்கயவர்களுக்குள் சிநேகத்வம் இராது; இஃதில்லையாயின், சங்கம் ஏற்படாது; சங்கமில்லையாயின், ஞானமும் அறமும் செழித்து உயர்ந்து வியாபியா "எனினும், அவர்கள் எத்தகைய சிந்தனையுமில்லாமலே ஜீவித்திருந்து பற்பலதொழில்கள்செய்து வருகிறார்களே?" என வினவலாம். அவர்களுடைய சிந்தனைகளெல்லாம் (thoughts) வீண் மனோபாவனைகளே; அவர்களுடைய செயல்களெல்லாம் சுயவறிவுப்பெருக்கால் சுயவளர்ச்சியின்பொருட்டுச் செய்யப்படுவனவல்ல; பிறர் ஆக்ஞைகளுக்குக் கீழ்ப்படிந்து, அயலார்களால் பலவந்தப்படுத்தப்பட்டு உழைக்கின்றார்கள்போலும். இத்தகையவர்களே அடிமைகளெனப்படுபவர்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[431-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து—1-ம் தசகம்.

5-ம் பாசுரம்.

வருந்தாத வருந்தவத்த மலர்கதிரின் சுடருடம்பாய்
வருந்தாத ஞானமாய் வரம்பின்றி முழுதியன்றாய்
வருங்காலம் நிகழ்காலம் கழிகால மாயுலகை
ஒருங்காக வளிப்பாய்சீ ரெங்குலக்க வோதுவனே.

உரை:—வருந்தாத - யத்தனப்பட்டு வராத - அதாவது சுபாவிகமான. அருந் தவத்த - அருமையான தபவின்பயன் நிகழ்ந்ததுபோல் இருப்பவனே! மலர் கதிரின் - பூத்த கிரணசாலியான. உடம்பாய் - மூர்த்தியாய், வருந்தாத ஞானமாய் - ஸ்வபாவிக ஞானவானாய். வரம்பின்றி - அறிவில்லாமல், முழுதியன்றாய் - முழுவதிலும் சஞ்சரிப்பவனே, வருங்காலம் - எதிர்காலம்-நிகழ்காலம், கழிகாலம் மூன்று காலத்திற்கும், ஆய்-சரீரனாய் ஆகி; ஒருங்காக - ஒரே மாதிரியாய், உலகை உலகத்தை, அளிப்பாய் - ரக்ஷிக்கிறவனே; சீர் - கல்வி

யாண குணங்களை; எங்கு - எப்படி, உலங்க - முடிவு பெற-அதாவது முடியும்படி, ஓதுவன் - நான் சொல்ல மாட்டுவேன்.

குறிப்பு:—தவத்த - எட்டாம் வேற்றுமை; அருமையான தவப்பயன்போன்று உலகத்தை ரக்ஷிக்க அஸாதாரணதேஜஸுடையவனை அழகிய திருமேனியுடையவனைச் சுவயமான திவ்விய ஞானமுடையவனை எல்லாக்காலத்திலும் ஒக்க ரக்ஷிப்பவனைப் இந்தஉலகு என்ன தபஸுசெய்து இவனை ரக்ஷகனைப் அடைந்ததென்று வியப்படையக்கூடிய எம்பெருமானை நான் எப்படிக் கல்யாண குணங்களையும் திவ்விய ரூபத்தையும் உரைத்து ஒன்றுவிடாதே முடியச் சொல்லப் போகிறேன்.

6-ம் பாசுரம்.

ஓதுவா ரோத்தெல்லா மெவ்வுலகத் தெவ்வெவையும்
சாதுவாய் நின்புகழின் தகையல்லாற் பிறிதில்லை
போதுவாழ் புனந்துழாய் முடியினைப் பூவின்மேன்
மாதுவாழ் மார்பினை யென்சொல்லி வாழ்த்துவனே.

உரை:—ஓதுவார் ஓத்தெல்லாம் - நாலுகளைகளாய் வேதங்கள் ஓதும்புகழெல்லாமும் மற்ற எந்தப் புகழ்களும், சாதுவாய்-உள்ளவற்றைக் கூறுகிறவைகளாய், நின்புகழின்தகை அல்லால் - உனக்குரிய புகழ்களின் உண்மையில் ஒரு பிரகாரமாய் - அதாவது ஏகதேசமாய் அன்றி; பிறிதில்லை-உன்னை முழுவதும் உள்ளது போல் வர்ணிக்கவில்லை.- உன் சிரசில் புனைந்திருக்கிற துளபமாலை அதிலேயே முளைத்தது போல் அலங்கரிக்கிற கிரீடமுள்ளவனே-பூவின்மேல் பொற்பாவையான மஹாலக்ஷ்மியை மார்பில் தரித்தவனே! நான் உன்னை என்ன சொல்லி வாழ்த்துவேன்.

குறிப்பு:—சாதுவாய்-புகழ்களின் பதங்கள் அர்த்தமாகும்படி - சாது என்ற ஆரியமொழியை "சரி" என்ற தமிழ்ப் பதம்போல் கேட்பவர்கள் மனம் உகப்பால் இரட்டித்துக் கூறும் வழக்கமுண்டு. ஆங்கிலத்தில் "hear" "hear" "Appluase" என்று சங்கங்களில் களித்துச் சொல்வதுபோல்.

7-ம் பாசுரம்.

வாழ்த்துவார் பலராக நின்னுள்ளே நான்முகனை
மூழ்த்தநீ ருலகெல்லாம் படையென்று முதற்படைத் [தாய்
கேழ்த்தசீ ரன்முதலா கிளர்தெய்வ மாய்க்கிளர்ந்து
சூழ்த்தமரா் துதித்தாலுன் றொல்புகழ்மா சுணாதே!

குறிப்புக்கள்:—நின்னுள்ளே ஏழாம்வேற்றுமைஉருபாயினும் மூன்றாம்வேற்றுமைப் பொருளில் வந்தது. அதாவது, உனது ஸங்கல்பத்தாலே என்று கொள்ள வேண்டும். மூழ்த்த நீர் - பிரளய வெள்ளத்திலே. கேழ்த்த சீர் அரன் - பெருகாநின்ற சீர்மையுடைய. "சூழ்ந்து அமரர்" என்று "சூழ்த்தமரர்" என்ற தொடர் விரியும். மாசுணாதே - மலினமடையாதோ.

பொழிப்புரை:—நீர் ஒருவராகையாலே வாழ்த்த முடியாதென்றீர். ஆகில் பலரோடு நின்று வாழ்த்தினிலோவென்னில்; வாழ்த்துவார் பலராகவே ஆகட்டும் நீபடைத்த பிரம்மாவாலே சிருஷ்டரான மஹேசுவரன் முதலான தேவதைகளை எத்தட்டும். அவர்கள்தாம் உன்னுடைய குணங்கள் முடிய ஏத்தவல்லரோ - அவர்களில் ஒவ்வொருவர் மற்றொருவர் பேசும் கல்யாண குணங்களை தவிர்த்துத் தாம் எடுத்து விவகரிக்கும் கல்யாண குணங்களை ஏத்தினாலும்கூட உன் குணங்கள் அவர்களின் துதி யாவற்றையும் கடந்து நிற்பதால் மலினமடையும்.

8-ம் பாசுரம்.

மாசுணாச் சுடருடம்பாய் மலராது குவியாது
மாசுணா ஞானமாய் முழுதுமாய் முழுதியன்றாய்
மாசுணா வான்கோலத் தமரர்கோன் வழிபட்டால்
மாசுணா வுனபாத மலர்ச்சோதி மழுங்காதே.

மலராது குவியாது - பெரிதாகாமலும் சிறிதாகாமலும் ஒரேரீதியாய். மாசுணா - மலினமடையாத, சுடர் உடம்பாய் - தேஜோமயமான விக்கிரஹ விசிஷ்டனாய், மாசுணா ஞானமாய் - குற்றம் குறைவு இவை இல்லாத ஞானமுடையவனாய்; முழுதுமாய் - ஜகத்சிருஷ்டிக்கெல்லாம் சரீரகனாய்; முழுது - முழுமையும், இயன்றாய் - நிர்வஹித்தவனே அதாவது உற்பத்தி ஸத்தாஸ்திதிகளைச் செய்கிறவனே! மாசுணா - குறைபடாத; வான்கோலத்து-நிர்த்தோஷ ஞானமும் சிறப்பான ஆபரணங்களும், பூண்ட அமரர்கோன் பிரம்மா, வழிபட்டால் - வணங்கி ஏத்தினால், மாசுணா - கொஞ்சம்கூட தோஷமில்லாத; மலர்-உன்பாதஜோதிஸானது, இங்கு தோஷ கலப்பிலலாத கல்யாண குணங்களும் திவ்விய ஸௌந்திரியமும் தாத்பரியம். மழுங்காதே- மழுங்காதோ - மழுங்கும்

குறிப்பு:—பிரம்மாவேஏத்தவல்லன் அல்லாதபோது நான் எதைச்சொல்லி வாழ்த்துவது?

9-ம் பாசுரம்.

மழுங்காத வைநுதிய சக்கரநல் வலத்தையாய்
தொழுங்காதற் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றி
மழுங்காத ஞானமே படையாக மலருலகிற் [னையே
றொழும்பாயர்க்களித்தாலுன் சுடர்ச்சோதி மறையாதே

குறிப்புக்கள்:—வை - கூரான நுதி - முகம். வலத்தையாய்-வலதுபக்கத்தில வைத்திருப்பவனே (ஸம்போதநம்) தொழுங்காதல் களிறு-கைங்கரியம் செய்வதிலே மனம்வைத்த யானை - கஜேந்திர பகவான்; சுடர்ச்சோதி - உன்னுடைய வாத்ஸல்யமாகிற அதிசய பெரும்புகழான ஜோதிஸு; மறையாதே-வினை முற்று, மறைந்து போமல்லவா? ஞானமே படையாக - உன் திவ்விய பர அபேக்ஷையில்லாத ஞானக் கதிரையே ஆதாரவான ஆயுதமாக உபயோகித்துக் கஜத்தை முதலையினின்றும் விடுவித்துக் காப்பாற்றினை.

'பின்னும் அவனுடைய குணங்களை யேத்தியல்லது நிற்கமாட்டாமையாலே அவனுடைய குணங்களைச் சொல்லி ஏத்துகிறார். உன்னுடைய ஆச்ரித வாத்ஸல்யமாகிற மஹாகுணத்தை ஒருவருமறியாதபடி சங்கல்ப ஞானத்தாலே ஆசரிதன் கஜேந்திர ஆழ்வானை ரக்ஷித்தருளாதே, அந்த ஆச்ரிதவாத்ஸல்யம் ஸர்வ லோகங்களு மறியும்படி திருவாழியை யேந்திக்கொண்டு கருடாழ்வார்மேல் ஏறிவந்து தோன்றியருளி என்னை உண்டாக்கியருளினை யென்கிறார்'—ஆறுயிரப்படி

குறிப்பு:—ஆழ்வார் திருவுள்ளம், இப்படி லோகமெல்லா மறியும்படி கருடன்மேல வந்து ஆயுதமான சக்கரத்தைத தீட்டிக்கொண்டு கஜேந்திரனுக்கு இடர் தீர்க்காவிடில் தன்போலிகள் அவனது ஆச்ரிதவாத்ஸல்யத்தை அறியாது இழந்துபோக நேரிடலாமென்பது. இவ்வண்ணம் ஞான ஸங்கல்பத்தால் உத்தமியாகிய திரௌபதிக்கு இடர் தீர்த்தது ஞாபகப்படுத்திக்கொள்ளத் தக்கது. இவள் பர்த்தாக்களான பஞ்சபாண்டவர்கள் சொக்கட்டான் சூதாட்டத்தில் தங்களைத் துரியோதனுதியருக்கு அடிமைகளாய் விற்றுக்கொண்டநிமித்தம் திரௌபதியும் அடிமையாய்விட்டாள். பாண்டவர்களை அவமதிக்கும் நிமித்தம் திரௌபதியைச் சபையில் அவமானப்படுத்த துச்சாஸனன் அவளைத் துகில்உரிந்துவிட எத்தனிக்கப் பாண்டவர் தாங்கள் ஏற்பட்டக்கொண்ட ஆணையின் நிமித்தம் மனைவியின் இடர்பாட்டைத் தீர்க்கத் தடைபட்டுவாளா விருந்தனர். ஸ்ரீ கிருஷ்ண பகவான் அக்காலம் துவாரகையில் எழுந்தருளியிருந்தமையால் காப்பார் யாவருமில்லாமல் துயரப்படும் இத்திரௌபதி, "ஆ கிருஷ்ண! துவாராகவாஸ மாம்பாஹி" என்றுஓலமிட்டழைத்தாள். பகவான் ஆர்த்தஸ்வரத்தைச் செவியுற்றதும் தாம் ருக்குமணிதேவியுடன் ஆடிக்கொண்டிருந்த சொக்கட்டான் காய்களை "அக்ஷயம்" "அழிவின்றி இருக்கட்டும்" என்று உருட்டிஆடத் திரௌபதிதேவியின் துகில் வளர்ந்துவந்தது. துச்சாஸனனும் துரியோதனுதிகளும் அவமான மடைந்தார்கள்.

10-ம் பாசுரம்.

மறையாய நால்வேதத் துள்நின்ற மலர்ச்சுடரே
முறையாலிவ் வுலகெல்லாம் படைத்திடந்துண்டுமிழ் [ந்தளந்தாய்
பிறையேறு சடையானும் நான்முகனு மிந்திரனும்
இறையாத லறிந்தேத்த வீற்றிருந்த விதுவியப்பே.

குறிப்பு:—இறையாதல் - ஈசுவரத்துவம். மறை-பக்தியில்லாதவர்களுக்குப் பொருளறியமாட்டாமையால் வேதங்கள் 'மறை'

பொழிப்புரை:—"பக்தி இல்லாதார்க்குஉன்னை யறியவொண்ணுதபடிமறைத்துக்கொண்டிருக்கின்ற எல்லா வேதங்களும் எடுத்துரைக்கின்றவனைச் சிருஷ்டிசெய்த முறையால் ஜகத்துக்கு உற்பத்திஸ்திதி ஸம்ஹார முதலாயிருந்த உன் ஸர்வேசுவரத்தையறிந்து உன்னை ஏத்துகைக்கு விஷயமாக உன்னைக்கொடுத்துக்கொண்டிருக்கிற இருப்பு உனக்கு ஒரு ஏற்றமோ? இப்படி இருக்குமுன்னை எதைச் சொல்லிநான் ஏத்துவதென்கிறார்—ஆறுயிரப்படி.

குறிப்பு:—சென்ற 7, 8, 9 பாசுரங்களில் சொன்ன இந்திரன் ருத்திரன் பிரம்மா மூவரையும் விவரமாய்க் கூறிக் கோஷ்டி சேர்த்துச் சொன்னபடி.

11-ம் பாசுரம்.

வியப்பாய வியப்பில்லா மெய்ஞ்ஞான வேதியனைச்
சயப்புகழார் பலர்வாழும் தடங்குருகூர்ச் சடகோபன்
துயக்கின்றித் தொழுதுரைத்த வாயிரத்து ளிப்பத்து
முயக்கொண்டு பிறப்பறுக்கு மொலிமுந்நீர் ஞாலத்தே

குறிப்புக்கள்:—வியப்பில்லா-ஸஹஜமாய ஆச்சரியபூதன்; வியப்பாய வெவ்வொருவரிடத்தில் இக் கல்யாண குணங்களும் திவ்விய ஸௌந்திரியமும் ஈசுவரத்துவமும் பொருந்தியிருந்தால் வியப்புக்கு ஆதாரமாகும். சயப்புகார் - தொண்டு செய்வதில் பேர் பெற்றவர்கள். துயக்கின்றி - யாதொரு ஸம்சயமுமின்றி; உயக்கொண்டு - ஞானபக்திகளை யுண்டாக்கி. முந்நீர் - சமுத்திரம்.

பொழிப்புரை:— "லோகத்தில் ஆச்சரியமானவற்றை ஆச்சரியப்படாதொருபடி ஸஹஜ குணமாகப் பொருந்தினவனையும் எல்லா வேதங்களும் எடுத்துரைக்கும் பகவானை அவனையேதொண்டு செய்கிறாரென்கிற புகழுடையார் பலர்வாழும் தடங்குருகூர்ச் சடகோபன் ஒரு அஞ்ஞான கந்தமில்லாதபடி ஸாக்ஷாத்கரித்துத் தொழுதுரைத்தவித் திருவாய்மொழி பகவானைநேரில் காண்கைக்கு விரோதியாயிருக்கும் ஸம்ஸாரத்தைப் போக்குமென்கிறார்—ஆறுயிரப்படி.

அரவரசி கதை

[தால்

செந்தமிழ்சேர் நிலவுலகில் செழும்வளங்கள் செறிந்துள
அந்தமுடை யதன்முகமபோ லழகியதோ ரூருளதாம்
கொந்தலர்தார் மார்பனெடு கோமகனுர் வாழ்கையிலே
சந்தமுடைப் பலசிறப்புஞ் சார்ந்திருந்த தெவ்விடமும் 1.

என்றாலும் பெருங்குறையொன் றெழிலரசன் மருங்குளது
பொன்றாத வாழ்வினிலே பொன்னெழில்சே ரறுமக்கள்
குன்றாத மகிழ்வுடனே குறைவின்றிப் பிறந்திருந்தும்
தென்றேய னடிசேர்ந்தார் திருமுகத்தி னெழிலொதுக்கி

ஏழான வருமைமக னெழிலுடனே யுதித்திடவும்
கீழான சோக்குர்றுக் கிலிபிடித்த முகத்தனையப்
பாழான யமனிதற்கும் பறந்திவர்ந்து வந்திடுமோ
ஊழான திவண்வருமோ வெனவேங்கி யரசிருக்க 3.

முப்பொழுதுமுழுதுணர்ந்துமுனிஒருவன்முன்தோன்றி
தப்பொன்று மில்லாதே தகுபுகழோ டிருப்பினுமே
எப்பொழுது மணமுடித்து இயங்குவனோர் சர்ப்பத்தால்
அப்பொழுதே யிறப்பதுதா னறிகுவையா லெனவியம்பும்

மன்னவனு மம்மாற்றம் மனதினிலே கரந்தருளி
என்னவற்குஞ் சிறிதேயு மியம்பாம லிருக்கையிலே
சின்னவனும் பெரியவனுப்ச் சிறப்புடனே வளர்ந்திலங்க
அன்னைமுத லெல்லாரு மரும்புதல்வன் நிலைப்[illegible]

மணப்பருவம் வந்துளதால் மன்னர்பிரானெண்ணமெதோ
கணப்பொழுதுந் தாமதமே கடப்புவதேனெனமொழிந்தார்
அணைநிகராந் துயரமுமே யணுகிடவும் பொறுத்தவனுப்த் [றன் 6.
துணைவிதனின் மொழிதனையே தொலைத்திலனு யாமென்

இளவரசன் தனைமணக்க விளவழகாங் கன்னிகைகள்
தளவரிசை பொற்பயந்த தருமனைக்கே தருவித்தார்
அளவரிதா மழகிகளோ வரண்மனையி லருகிருக்க
வளமதுதா னறியவுமே மன்னவனும் விளித்துரைத்தான்

என்னிளவல் தனைமணக்க விங்குவந்த மகளிர்காள்
முன்னின்றே யவன்றனைக்கு முடிவாகச் செயவல்ல
தன்னிடத்துச் சக்தியெதோ தவறாது விளம்புவிரால்
என்னவுமே யரசன்தா னியம்பிடவு மவர்மொழிவார்.

அவன்சேவை செய்திடுவ னருமையுட னென்றொருத்தி
அவனுடனே சமர்புகுவே னஞ்சாதே யென்றொருத்தி
அவனரசப் பணியினிலு மணுகுவன்யா னென்றொருத்தி
அவளவள் தன்பெருமையினை அறைந்தனரால்ஒவ்வொருத்தி

இறுதியிலே யின்முகத்தோ ரிளங்குமரி யின்னிசையால்
மறலியெனக் கொண்டேகும் மட்டுமவன் தனக்குகந்த [ன்
குறையுமது அணுகவிடாக் கொள்கைதனைக்கொள்ளுவனெ
[illegible]குமது செவியுற்ற வுத்தமனும் மகிழ்வடைந்தே 10.

இவள்தானே யென்மகனுக் கினியமனை யாட்டியென
உவப்பாலே வெளிவிளம்பி யவனுடனே மணத்தினுக்கு
எவர்தானும் மகிழ்வடைய வினியபொருள் சேகரித்துத்
தவறாதே பெருமணமுந் தமர்கட்குஞ் செய்வித்தான் 11.

தணந்தவராங் கன்னியர்கள் தம்மனத்தே தீப்பொறாமை
புணர்ந்தவராய் முனிவனிடம் புகுந்துளமே விரித்தனரால்
குணந்தெரிந்தே முனிவனுமே கொடுமரவி னரசிதனை
அணுகுவிரா லுமதெண்ண மடைந்திடுவீ ரெனமொழிந்தான்.

அரவரசி தனையடைந்தே யழகிகளு முளம்விடுத்தார்
கரவிடமும் விதிசெயலும் கலந்திருக்கக் கண்டவளும்
சிரமசைத்தே தன்தொழிலைச் செயநினைத்துப் பரிவாரம்[ள்
புரமதற்குத்தொகுத்தனுப்பிப்புதல்வனுயிர்கொளச்சொன்னு

அடைந்தனவே மணமனையை யரவுகளு மாயினுமே
குடைந்தங்குச் சிறுவண்டுங் கூடமதிற் புகமாட்டா
தடைத்திருந்த வரையினையே யரவரசி தெரிந்தங்குப்
படைத்தனளே யோருபாயம் பாங்காகச் செயலினழக்க 14.

மன்னன்றன் காரியத்தன் மருங்கினிலே செல்கையிலே
துன்னியவன் மீதுயிர்ப்பத் துள்ளரவை யேவினதும்
அன்னவன்தான் வெடுவெடுக்க வஞ்சியதைக் கண்டரசி
சின்னவளை யொன்றமைத்தாற் சிரபயந் தருவனென 15.

அவ்வணமே யரண்மனையி லரும்வளையொன்றமைத்திடவும்
தெவ்வரவுக் கணமொன்று தெரியாதே யதிற்கரந்து
எவ்வெவரும் மணத்திரவி லேமாந்தே யிருக்கையிலே
வவ்வியதாம் மணமகன்றன் வல்லுயிரைக் கவ்வியுமே 16.

மணமகனும் பிணமகனும் மணவறையும் பிணவறையாய்க்
கணமதனில் பெற்றவரும் கண்துளிகள் விட்டழவும்
தணல்போலக் கண்சிவக்கத் தமரெல்லாம் விக்கியழ
மணமகளோ வினயமதாய் மாமிதனை விளித்துரைப்பாள்

என்றனக்குச் சிறுபாச லியற்றிடுவீர் யானுமதில்
என்றலைவ னுடலுடனே யேகுவளா லவரசின்
தன்றலைவா யிற்றனையே தானடைந்து நீதியினை
மன்றினிலே பெறுவனென மன்னவனு மனமொத்தான்

சிறுபாச லொன்றியற்றிச் சீர்நதியில் வைத்திட்டார்
சிறுவனிதை கணவனையும் சிற்றோடைமேல் தலைவைத்து
உறுதுயரம் பொங்கியெழ வுளமெல்லாம் வெதும்பியுற
பெறுதுயரம் தனையடக்கப் பெருமுயற்சி செய்தேகும் 19.

ஆற்றினிலே பலநாளு மரும்பாசல் மிதந்தேகும்
காற்றினிலே மழையினிலே கானகத்தும் வானகத்தும்
போற்றிடுவோ ரெவரின்றிப் போமாது தன்மனத்தின்
ஆற்றலினை யெவரறிவா ரருஞ்செயலும் செய்தலுறும் 20.

பசியாலுங் கொடுவெயிலில் பரிதவிக்கத் தாகத்தின்
இசியாலு முடல்சுருங்க விடிபோலும் பலமிருகம்
சிசிபோலும் பலவுருவம் நிகழ்ந்தாடச் சிறிதேனும்
சிசுபோலு மவ்வரசி சிறந்தேகும் பயமின்றி 21.

பன்னெடுநாள் நதியினிலே பாசல்மீ தமர்ந்தவளாய்த்
தன்னுயிரும் கைப்பிடித்தே சர்ப்பரசன் மனைதேடிப்
பின்னொருநாள் கடலுடனே பெருநதியும் கலக்குமிடத்
தின்னமைந்த அரவரசன் இல்லமதைச் சார்ந்தனளால் 22.

உட்புகுந்தே யரவரச னுட்கார்ந்த வாசனத்தைக்
கட்புகுந்த கணமதிலே கடிதேகிக் கழுத்திறுக்கி
நட்புடனே யென்பதியின் நஞ்சிழுத்துத் தாராயேல்
புற்புழுவை நசுக்குமாறன் புன்றலையை நசுக்குவனால் 23.

எனவெருட்டப் பாம்பரசியிருந்ததன்மை யுணர்தலுமே
தனதரிய செய்கையினால் தன்கணவன் இடருறுதல்
கனவினுமே சகியாதாள் நனவினிலே காண்கையினால்
இனவாவு தனைவிளித்து விடமுழுதும் இழுத்திடென. 24.

அரவுகளும் விடத்தினையே யரசுடனின் றுருஞ்சினவால்
சிரமசைத்துக் கையசைத்துச் சிற்றரச னெழுந்தனனால்
தரையிடையே யுறங்கினவன் தானாக விழித்தாற்போல்
கரமெடுத்தவ் விளவரசி கணவன்தன் தாள்தொழுதாள் 25.

நெஞ்சினிய மிகமகிழ்ந்து நினைத்ததுவும் கைகூடக்
கொஞ்சிடவே தன்மனைக்குக் கொண்டேகவெண்ணுகையில்
நஞ்சரவி னரசனுமே நண்புடனே பலபரிசு
எஞ்சலிலா தளித்தனனு லெழில்படகு மமைத்திட்டே 26.

எழிற்குமரி தன்கணவ னியங்கியுறும் நாவாயில்
கழியுலாவு கடற்கரையைக் கழிந்திடுவான் நதிவழியே
எழில்நகரம சென்றடைய வேந்தலுடன் பேரரசி
விழியாலுங் கரத்தாலும் வினவிடவே யழைத்தனரால் 27.

கற்பெனுமோர் நற்குணத்தைக் காரிகையார் போற்றிடவும்
இற்புகுந்த சாவித்ரி யெனுமரசி முன்னாளில்
வற்புறுத்து வாறேபோல் வாசுகியின் விடமீட்டிக்
கற்பணங்கு கணவனையே களித்தடைந்த கதையிதுவால் 28.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[436-வது பக்கத் தொடர்ச்சி

அங்கம் 3. களம் 2.

ப்ரூட்டஸ்:—நல்ல வென் சுதேசிகாள், தனியே என்னை ஏகவிடுங்கள். என்பொருட்டு இங்கு ஆண்டனியுடன் இருங்கள். ஸீஸரின் சவத்திற்குக் கவுரவம் செய்யுங்கள்; ஸீஸரின் பிரதபங்களைப்பற்றி நிகழும் அவன் பிரசங்கத்தைக் கண்ணியமுடன் கேளுங்கள். அதனைச் செய்ய மார்க் ஆண்டனி எங்களால் அநுமதி அளிக்கப்பெற்றிருக்கின்றான். ஆண்டனி பேசிமுடிக்கும் வரையில், நான் ஒருவன் தவிர, எவனும் அகலலாகாதென்ன வேண்டிக் கொள்கின்றேன். (1). [ப்ரூட்டஸ் போகின்றான்]

முதல் நகரவாசி:—ஓ! இருங்கள்! மார்க் ஆண்டனி பேசுவதைக் கேட்போம்.

(1) ஆண்டனிக்கு அளித்த வாக்கின்படி அவன் இங்குப் பேசுவதற்கு இடந்தருகின்ற ப்ரூட்டஸ் தன்னுடைய அநுமதியினாலேயே அவன் பேசவருகின்றான் என்பதைத் தெரிவிப்பதுடன், ஸீஸரின் பெருமைபுகழ்களைப்பற்றியன்றி வேறொன்றும் பேசலாகாதென்பதையும் ஆண்டனிக்கு நினைப்பூட்டுகின்றனன்.

(2) "என் உயிர்முதல் எல்லாம் உங்கள் கையிற்றான் இருக்கின்றன" என்று ப்ரூட்டஸ் பொதுஜனங்களை முகஸ்துதி செய்துவைத்திருக்கின்றான். ஆகையால், தமக்கிருக்கும் அதிகாரம் மிகப்பெரிது என்னும் நினைவு இந்தச் சனங்களின் மனங்களில், அவர்களை யறியாமலே தலைவிரித்தாடத் தலைப்படுகின்றது. "பெருந்தகை, ஆண்டனி, ஏறு" என்று ஏவுவதில் அவ்வதிகாரத்தின் குரலைக் கேட்கலாம்.

மூன்றாம் நகரவாசி:—பொதுமேடையி லவன் ஏறட்டும்; அவன் சொல்வதைக் கேட்போம்—பெருந்தகை ஆண்டனி, ஏறு. (2)

ஆண்டனி:—ப்ரூட்டஸின்பொருட்டு நான் உங்களுக்குக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். [ஏறுகின்றான்]

நான்காம் நகரவாசி:—ப்ரூட்டஸைப்பற்றி என்ன சொல்கின்றான் இவன் (3)?

மூன்றாம் நகரவாசி:—ப்ரூட்டஸின் பொருட்டு நம்மெல்லோர்க்கும் கடமைப்பட்டிருக்கக் காண்கின்றானெனக் கூறுகின்றான்.

நான்காம் நகரவாசி:—ப்ரூட்டஸைப்பற்றி அவனிங்குப் பொல்லாங்கொன்றும் பேசாதிருப்பானாயின் நலம். (4)

முதல்நகரவாசி—வல்லரசுக்கொடியோன் இந்தஸீஸர்.

மூன்றாம் நகரவாசி:—அது நிச்சயம். உரோமாபுரியினின்றவனைத் தொலைத்தது நம் பாக்கியந்தான்.(5)

இரண்டாம் நகரவாசி:—சும்மாவிருங்கள். ஆண்டனி என்னசொல்லக்கூடு மென்பதைக் கேட்போம்.

ஆண்டனி:—நண்பர்காள், உரோமர்காள், சுதேசிகாள் உங்கள் செவிகளைச் சற்றே எனக்கு உதவிவையுங்கள். ஸீஸரைப் புதைக்கவே யன்றிப் புகழவோ யான் வருகின்றேனல்லேன் (6).மனிதர் மாய்ந்தபின்னும் மாயாதிருப்பன அவர் இழைத்த தீமைகளே; நன்மைகளோ பெரும்பாலும் அவர்தம் எலும்புகளினுடனேயே புதையுண்ணப்பெறுகின்றன. அப்படியே ஸீஸருக்கும் இருக்கட்டும். (7). ஸீஸர் பேராசை பெரிதுடைய னாயினனெனப் பெருந்தகை ப்ரூட்டஸ் உங்களுக் கியம்பினான்; அவ்வாறாயின் அது கொடியதோர் குற்றமே (8); கொடியதோர் வகையினில் ஸீஸரும் அதற்கு ஈடு செய்துவிட்டான் (9). இங்கு, ப்ரூட்டஸும் மற்றவர்களும் அளித்த அநுமதிக்கடங்கி—ப்ரூட்டஸோ பெரிய மனிதன்: அப்படியே அவர்களெல்லோரும் பெரிய மனிதர்களே (10)—ஸீஸரின் ஈமச்சடங்கிற் சில இயம்ப வருகின்றேன் யான். அவன் என் நண்பன், என்பால் உண்மையொடு நீதியுமுடையவனாயிருந்தவன். எனினும், அவன் பேராசை பெரிதுடையனாயினான் என்கின்றான் ப்ரூட்டஸ்; மற்று, ப்ரூட்டஸோ ஒரு பெரியமனிதன் (11). அவன், சிறைப்பட்டோர் எண்ணிறந்தோரை உரோமிற்குக் கொணர்ந்துளான்; அன்னார்தம் விடுதலைக் கீடாகக் கொடுத்த பொருளத்தனையும் பொதுப்பொக்கிஷத்தையே நிறைத்தன: ஸீஸரில் இதுவோர் பேராசையாகத் தோன்றுகின்றதோ (12)? ஏழைகள் அழுதிடுந்தோறும் ஸீஸரும் அழுதிருக்கின்றான். பேராசை என்பது இதனினுங் கடினமாயதொன்றினால் செய்யப்பட்டிருக்கவேண்டுமே (13). எனினும், பேராசை பெரிதுடையவனாயினனவன் என்கின்றான் ப்ரூட்டஸ்; மற்று, ப்ரூட்டஸோ ஒரு பெரிய மனிதன். லூபர்க்கலில் மும்முறை அரசமுடியொன்று யான் அவனுக்களிக்க, மும்முறையும், அவனதனை மறுத்துவிட்டதையும் நீங்களே பார்த்திருந்தீர்; இதுவோ பேராசை? எனினும், பேராசை பெரிதுடையனாயினனவன் என்கின்றான் ப்ரூட்டஸ்; மற்று, ப்ரூட்டஸோ ஒரு பெரியமனிதன், நிச்சயம். ப்ரூட்டஸ் பேசியதைப் பொய்யாக்கப் பேசுகின்றே

(3 &4) ஆண்டனி வாயினின்று ப்ரூட்டஸ் எனும்பெயர் வருவதுமட்டுமே இந் நகரவாசியின் செவியில் விழ மற்ற சொற்கள், கலகலவென வெழுந்த அக்குழுவின் ஒலியினுக்கிடையே, எட்டவில்லை. பொதுஜன நன்மையின்பொருட்டுத் தன் ஆருயிர் நண்பனும் ஸீஸரையே தியாகஞ்செய்த உத்தமன் என்று ப்ரூட்டஸை இப்பொழுது மிகவும் ஆதரித்துக்கொண்டாடுகின்ற ஜனங்களில் ஒருவனாகிய இவன், ப்ரூட்டஸ்என்ற பெயரைக் கேட்டமாத்திரத்தில், தன்செவிகளை நெரித்து முகஞ்சுளித்து, எல்லா அதிகாரமும் தன்கையிலே இருக்கின்றதென்னும் நினைவிற்குரியவோர் பெருமிதக் குரலுடன், 'ப்ரூட்டஸைப்பற்றி என்ன சொல்கின்றான் இவன்' என்று கேட்டு, சொல்லியதை யறிந்தபின், "ப்ரூட்டஸைப்பற்றிப் பொல்லாங்கு பேசியும் பிழைப்பானோ, ஆண்டனி" என அச்சுறுத்துகின்றான்.

(5) நாவன்மையுடையவர் அழுத்திச் சொல்வதையெல்லாம் சனங்கள் பகுத்தறிவின்றி உண்மையென்று நம்பிவிடுவார்கள். ஸீஸர் கொடியவன் என்பதுபற்றியும் அவன் தொலைந்தது நலமே என்பதுபற்றியும் இவர்களுக்குச் சந்தேகமே இல்லை.

(6) "ஸீஸரின் புகழினைப் பேசுவான், இவ் ஆண்டனி, இருந்துகேளுங்கள்" என்று ப்ரூட்டஸ் சொல்லிய அளவு கூடத் தான் செய்ய நினைக்கவில்லை என்பான்போல், "ஸீஸரைப் புதைக்கவே வருகின்றேன், புகழ அன்று" என்று எடுத்துக்காட்டி, தன்பால் சிறிதும் ஜனங்கள் சந்தேகம்கொள்ளாதபடி ஆண்டனி காத்துக்கொண்டே ஆரம்பிக்கின்றான்.

(7) "ஒவ்வொருவனும் தன் வாழ்நாட்களில் நல்லனவும் செய்திருப்பான், தீயனவும் செய்திருப்பான். அவன் செய்துள நன்மைகளோ, அவன் செத்தவுடன் அவனோடு மறைந்துவிடும்; தீமைகளையோ சனங்கள் மறவாமல் நெடுங்காலம் தம் மனத்தில் வைத்திருப்பார். ஸீஸரின் கதியும் அப்படியே ஆகட்டுமே. இப்பொழுது அவன் புகழைப் பேசுவதால் பெறுவதென்ன ?" என்று ஆண்டனி, ஜனங்களின் இயற்கையை யிகழ்ந்தும், ஸீஸர் செய்த நன்மைகள் உளவென்று நினைப்பூட்டியும், ஒன்றிலும் சாராமல் தான் நடுநிலை நிற்பவன் போலவும் பேசப்புகும் இத்திறமை மிகப்பெரியது.

(8) எது கொடியதோர் குற்றம்? ஸீஸர் பேராசையுடையவனாயிருந்ததா? அல்லது ப்ரூட்டஸ் அவ்வாறு கூறியதா? இரண்டிற்கும் ஒட்டிப் பேசுகின்றான் ஆண்டனி.

(9) குற்றம் யாருடையதேயாயினும் ஸீஸர் அதற்குத் தன் உயிரைக் கொடுக்கவேண்டி நேர்ந்தது—என்பது பொருள்.

(10) பெரிய மனிதன்—என்பது கெண்ணியமும் கௌரவமும் உடையவன் என்னும் பொருளது. இப்பொழுது, 'பெரிய மனிதன்' என்று ஆண்டனி ப்ரூட்டஸை அழைப்பது உண்மையில் அவனைப் பாராட்டுவதுபோல் தோன்றினாலும், வரவர, அத்தொடர் வஞ்சப்புகழ்ச்சியாய் வழங்கலாகின்றதென்பது வெளிப்படும்.

(11) ஸீஸர் பேராசையுடையவன் என்று அவனைப் பழித்தது பொய்யென்று காட்டிவிட்டால், ப்ரூட்டஸின் செல்வாக்கு உடனே சிதைந்துவிடும் என்பதுணர்ந்த ஆண்டனி அதனையே முதலில் பற்றிக்கொள்கின்றான்.

(12) போர்வென்ற படைத்தலைவர், தோல்வியுற்ற அரசர்களையும் மற்றப் பிரதானிகள் முதலானவர்களையும் சிறைகொண்டுவந்துவிடுவார். மறுபடி சிறைப்பட்ட அவர் விடுதலையடையவேண்டுமாயின் தமக்கு ஈடாக மிகுந்த பொருள் தரவேண்டும். இந்தப் பொருள், வென்றுகொண்ட போர்வீரனையே சேரும். அப்படியிருக்க, ஸீஸர்மாத்திரம் அப்பொருளைத் தனக்கென்று எடுத்துக்கொள்ளாமல், அரசாங்கபொக்கிஷத்திற்குக் கொடுத்துவிட்டான். இப்படிச்செய்ததுபேராசைக்கு அடையாளமாகுமோ என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்—என்கின்றான் ஆண்டனி.

னல்லேன்; எனக்குத் தெரிந்ததைப் பேசுதற்கே இங்குயான் இருக்கின்றேன். நீங்களே அவன்பால் ஒருகாலத்தில் அன்புவைத்திருந்தீர்கள்—காரணமின்றியே யன்று (14) எனின், அவனுக்குத் துக்கங்கொண்டாட வொட்டாமல் எக்காரணம் உங்களை இப்பொழுது தடுக்கின்றது? ஓ நீதியே, நீ முரட்டு மிருகங்களிடத்திற் போய்விட்டாய்; மனிதரோ தம் பகுத்தறிவை இழந்துவிட்டனர் (15)! என்னைப் பொறுத்திடுவீர். என்னிதயம் அங்கு அப்பெட்டியில் ஸீஸருடன் இருக்கின்றது; மீண்டுமது என்வயின் வரும்வரையில் யான் காத்திருக்கவேண்டும். (16).

முதல் நகரவாசி:—இவன் சொல்கின்றவைகளில் நியாயம் அதிகம் இருக்கின்றதென நினைக்கின்றேன்.

இரண்டாம் நகரவாசி:—விடயத்தை நீ நேராகச் சிந்திப்பாயாயின், ஸீஸர் பெரும் பழி எய்திருக்கின்றான். (17).

மூன்றாம் நகரவாசி:—எய்தினனோ, ஐயன்மீர்? அவனிலுங் கேடானஒருவன் அவனிடத்திற்கு வருவானென அஞ்சுகின்றேன் (18)

நான்காவது நகரவாசி:—இவன் மொழிகளைக் குறிக்கொண்டனையோ? கிரீடத்தை ஏற்பதற் கவன் இசைந்திலன்; ஆதலின், அவன் பேராசை யுற்றிருக்கவில்லை என்பது நிச்சயம்.

முதல் நகரவாசி:—அப்படி என்பது வெளியானால், அரிதின் இதற்கு ஆளாவார் சிலர். (19)

இரண்டாம் நகரவாசி:—பாவம், அழுதழுது இவன கண்கள் கனலெனச் சிவந்து போயின.

மூன்றாம் நகரவாசி:-ஆண்டனியைவிடப் பெருந்தகையொருவன் இந்த உரோமாபுரியில் இல்லை. (20

நான்காம் நகரவாசி:—இதோ, கேளுங்கள்; மறுபடி இவன் பேசத்தொடங்குகின்றான்.

ஆண்டனி:—நேற்றேயும் ஸீஸரின வாய்மொழி இவ்வையகத்திற் கெதிருற நின்றிருக்கக் கூடும் (21). இப்பொழுதோ, தன்னை மதித்துவணங்கத்தக்க ஏழையோ எவனுமின்றி இங்குக் கிடக்கின்றான். (22). ஓ, ஐயன்மீர், உங்கள் இதயங்களையும் மனங்களையும் இகலுக்கும் வெகுளிக்கும் கலகம்விட நினைத்தேனாயின் யான் ப்ரூட்டஸிற்குக் கெடுதி செய்தவனாகவேண்டும், காஸ்ஸியஸிற்குங் கெடுதி செய்தவனாகவேண்டும் (23). அவர்களோ, நீவிரெல்லீரும் அறிவீர், மிகப் பெரிய மனிதர். அவர்களுக் கொன்றும் கெடுதி செய்யமாட்டேன் அத்தகைய பெரியமனிதர்களுக்குக் கெடுதிசெய்வதனினும் மடிந்தவற்குக் கெடுதி செய்யினும் செய்யலாம். உங்களுக்குக் கெடுதி செய்யினுஞ் செய்யலாம், எனக்கே கெடுதி செய்துகொள்ளினும் கொள்ளலாம் (24). ஸீஸரின் முத்திரையிட்ட பத்திரமொன்றுஇதோ இருக்கின்றது—இதனை அவன் அந்தரங்க அறையிற் கண்டெடுத்தேன்—இது அவனது மரணசாஸனம்; பொதுஜனங்கள் இச்சாஸனத்தை மாத்திரம் கேட்பாராயின்—என்னை மன்னியுங்கள், இதனைப் படித்துக்காட்ட நான் கருதுகின்றேனல்லேன்—உடனே சென்று அவர்கள், இறந்த ஸீஸரின் இரணங்களுக்கு முத்தமிட்டு, அவன் திட்டிய இரத்தத்தில் தம் கைத்துணிகளைத் தோய்ப்பர் (25). அம்மட்டோ! ஞாபகார்த்தமாய் அவன் உரோமமொன்று இரந்துபெற்று, தாம் சாகும் நாள் தத்தம் மரண சாஸனங்களில் செப்பி அதனைத் தம் மக்களுக்கு விலையரிய செல்வமென வைத்துச் செல்வார். (26).

நான்காம் நகரவாசி:—இம் மரணசாஸனத்தை நாங்கள் கேட்டே தீர்வோம்: அதனைப்படிப்பாய், மார்க் ஆண்டனி.

ஜனங்கள்:—மரணசாஸனம், மரணசாஸனம் ! ஸீஸரின் மரணசாஸனத்தை நாங்கள் கேட்டே தீர்வோம். (27)

(13) ஏழைகளோடு ஸீஸரும் அழுதான் என்றால், அவன் எவ்வளவு இரக்கமுள்ளவனாக இருக்கவேண்டும். பேராசையுடையவர்கள் இரக்கமுடையவர்களாகவும் இருப்பதென்பது கூடுமோ, நீங்களே யோசித்துப்பாருங்கள்—என்பது பொருள்.

(14) நீங்கள் அவன்பால் அன்புவைத்திருந்ததற்குத் தக்க காரணங்களும் இருந்தன.

(15) மனிதருக்கு மிருகங்களே மேல்; அவைகளுக்கிருக்கும் நீதிநினைவுகூட இப்பொழுது மனிதரிடைக் காணவில்லை, பகுத்தறிவும் இழந்துவிட்டனர். இல்லையெனில், ஸீஸரின்மீது வைத்த அன்பை இவ்வளவுவிரைவில் துறந்துவிடுவீரோ, என இடித்துரைக்கின்றான்.

(16) இப்படி யான் கடிந்து பேசுவதை மன்னியுங்கள். என் இதயமெல்லாம் ஸீஸருடன் தங்கிவிட்டதாதலின் இப்படி நான் மெய்ம்மறந்துபேசிவிட்டேன்—என்பதுபொருள். இதனால், தன் உரையைச் சிறிதளவு இடையே நிறுத்திக்கொண்டு, ஜனங்கள் என்ன பேசிக்கொள்கின்றனர் என்பதைச் சோதிக்கவும் ஆண்டனி சூழ்கின்றான்.

(17) ஸீஸர் பெரும்பழி எய்தியிருக்கின்றான்—என்னும் இவ்வாசகம் இருபொருள் விளையநிற்கின்றது. பிறர்செய்த பழிக்கு ஸீஸர் பெரிதும் ஆளாகிக்கிடக்கின்றான் என்ற பொருளில் இந்நகரவாசி இயம்பினன்போலும்.

(18) மற்ற நகரவாசி, "ஸீஸர் கொடியன செய்து பெரும் பழி பூண்டிருக்கின்றான்" என்னும் பொருளிற்கொண்டு, "எய்தினனோ, ஐயன்மீர்" என்று பரிகசித்து, "இவன் கொடியவனாயின், இவனிலுங் கேடான ஒருவனே வேறு அவ்விடத்திற்கு வரப்போகின்றான், பாருங்கள்—என்று ஏசுகின்றனன்.

(19) உண்மையாக ஸீஸர் பேராசையுடையவ னல்லன் என்பது நிச்சயமாகுமானால், அவனைக் கொன்றவர்களை நாம் சும்மா விடமாட்டோம்—என்பது பொருள்.

(20) ஸீஸருக்காக ஆண்டனி வடிக்கின்ற கண்ணீரைக் கண்டு சனங்கள் மிகவும்பரிவுகூர்ந்து ஆண்டனியைப் புகழத் தலைப்படுகின்றனர்.

(21) உலகமெல்லாம் ஒருபக்கம்,ஸீஸர் மறுபக்கம்-என்று நின்றாலும், ஸீஸரின் ஒரு சொல் அவ்வுலகமத்தனையும் அடக்கி விஞ்சியிருக்கும்—என்பது பொருள்.

(22) இவனிலும் ஏழை எவனும் இல்லையென்னும்படி ஒருவராலும் மதிக்கப்படாதவனாய்க் கிடக்கின்றான்—என்பது பொருள்.

(23) உங்களுக்குக் கோபமூட்டிக் கலகம்செய்யத் தூண்ட நினைத்தேனாயின், இப்பொழுதே இயற்றிவிடுவேன். ஆயினும் அது ப்ரூட்டஸிற்கும் காஸ்ஸியஸிற்கும் கெடுதியாய் முடியுமே என்று எண்ணி அப்படிச் செய்ய விரும்பாமலிருக்கின்றேன்—என்பது பொருள்.

(24) சொல்லாமற் சொல்கின்ற சூழ்ச்சி இது. தானும் ஜனங்களும் ஸீஸரும் ஒற்றுமையுடைய உறவினரென்னும் உணர்ச்சியை உண்டாக்கி, ப்ரூட்டஸையும் காஸ்ஸியஸையும் மாற்றாராகப் பிரித்துக் காட்டுகின்றான். நாம் கெட்டாலுங் கெடுவோம், மற்றவர்களைக் கொடுக்கலாகாது—என்பது பொருள்.

(25 ஸீஸரின் மரணசாஸனத்தை (will) படித்துக்காட்டுவதற்கே அதனைக் கொண்டுவந்திருக்கின்றான் ஆண்டனி. ஆயினும், அதனைப் படித்துக்காட்ட இஷ்டப்படாதவன் போல் நடிக்கின்றான். "கேட்டமாத்திரம் விடுவீர்களானால் ஸீஸர் எவ்வளவு நல்லவன் என்பதும், அவன் பொதுஜனங்களாகிய உங்களிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தானென்பதும் வெட்டவெளியாகி, ஸீஸரைத் தெய்வமாகக் கொண்டாடத் தலைப்படுவீர்"—என்பது பொருள். இதனால் அவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டி, அவர் வற்புறுத்தியதால் மட்டுமே தான் படித்துக்காட்ட இசைந்ததுபோல் தோன்றுபடி சூழ்கின்றான்.

(26) ஸீஸரின் மயிரொன்று தம் வமிசத்தில் இருந்தாற் போது மென்னும்படி அவன்நினைவைச் சனங்கள் பாராட்டுகின்றவர்களாவார்—என்பது பொருள்.

(27) இதற்கே ஆண்டனி வேலை செய்தான். அவன் எண்ணியபடியே சனங்களும் ஆரவாரம் செய்கின்றனர்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[425-வது பக்கத் தொடர்ச்சி]

பாலுறு பிரையுங் கனலிடு கடுவும்.

தானே முனிவா னென்றறைதலுந் தக்கதன்றென, இளையவன் முனிவைச் செப்பி இடம்பெயர்ந்தகன்றுசென்ற இராமனை உருகநோக்கி, "இன்றிவன் ஆகம் புல்லேன் எனின் உயிர் இழப்பென்" என வெய்துயிர்த்து அவ்வரக்கமாது தன்பூம்பொழிற்பளிக்கறை சேரும்வேலை, கதிரோன் குடபாற்சாய அந்திவேளைவந்திறுத்தது. காமத்தால் நைகின்றாள் நாணமில்லா இந்நங்கை. விரக வேதனைகள் எய்தி வெதும்புகின்றாள். வாடைக்காற்றும், வெண்மதியும், கடலொலியும், அன்றிற்குரலும், அநங்கன் வாளியும், இவையனைய பிறவும் அரக்கிமுதல் அரம்பையர் ஈறாக யாவர்க்கும் உளவாதலின், சூர்ப்பணகைக்கிவைசெய்த சோகத்தைக் கம்பர் இனிச் சில பாசுரங்களிற் பாடுகின்றார். கோசிகமுனிவனுடன் மண்வழிநடந் தடிவருந்த வந்தவிக் கொண்டலைக்கண் டுளந்துறந்து பண்டைநாள் சானகியும் மிதிலை மாநகரின்கண் மதியமும் மதனனும் இழைத்த கொடுமைகளுக் காற்றாமல் உழைத்தனள். இன்றைக்கிவ்வரக்கியின் நிலைமையும் அன்னதே. ஆயினும் அடுத்து வந்த துன்பங்கள் ஒருபடித்தாக, அவைகளை ஏற்றுக்கொண்டவர் தன்மைக்கிணங்கி நாடகநலமுடைச் கம்பர்பெருமான் நவிலும்முறையினை மாற்றியபரிசினால் செஞ்சொற் கவியின்பம் சாலச் சிறக்கின்றது. சனகன் மாமகட்கு,

> மாலுற வருதலு மனமு மெய்யுந்தன்
> நூலுறு மருங்குல்போ னுடங்கு வாணெடுங்
> காலுறு கண்வழி புகுந்த காதனோய்
> பாலுறு பிரையெனப் பரந்த தெங்குமே

[ஆசை மிகுதியாக விளையவும்,மனமும் உடலும் தன் நூல் அனைய இடுப்பைப்போலவே அவள் துவள்வாள் ஆயினள். அகன்று சென்ற இராமனது பாதங்களையே உருக்கமுடன் பார்த்துக்கொண்டிருந்த இவள் கண்களின் வழியாய் உள் புகுந்த காதல்நோயானது பாலில் கலந்த பிரையைப்போல அவள் உடல்முழுவதும் பரவலாயிற்று]

என்ற கம்பர், பாலும் பிரையும் அனைய சீரிய செய்திகள் இவ் வல்லரக்கிக் காவ்வாதென ஒழித்து,

> அழிந்த சிந்தைய ளாயயர் வாள்வயின்
> மொழிந்த காமக் கடுங்கனன் மூண்டதால்
> வழிந்த நாகத்தின் வன்றொளை வாளெயிற்
> றிழிந்த கார்விட மேறவ தென்னவே

[நாகப்பாம்பின் வலிய தொளையுடைய கொடிய பற்களிலிருந்து சொரிந்துவழிந்த கரியவிஷம் உடலில் ஏறுவதுபோல, ஒடுங்கிய மனமுடையவளாய்ச் சோர்கின்ற சூர்ப்பணகையினிடத்து, காமமென்னுங் கொடியநெருப்பு மூண்டது]

எனப் பாம்பின் விஷம் பரவுங்கொள்கையே இவளுக்குரியதென் றுணர்ந்து கூறினர். வள்ளல் இராமனுக்கோர் அமுதமாயமைகின்ற சீதைக்குப் பாலுறு பிரையெனக் காதல்நோய் எங்கும் பரந்ததெனின்,நஞ்சமெனவந்த இவ்வஞ்சமகள் திறத்திலது கார்விடமெனக் கலந்துகொண்டது. இவ்வாறே, சீதைக்கு

> காமனு மொருசரங் கருத்தி னெய்தனன்
> வேமெரி யதனிடை விறகிட் டென்னவே

[வேகின்ற நெருப்பில் விறகு போட்டதுபோல் மன்மதனும் ஒரு பாணத்தை யவள்கருத்தில் எய்தான்]

என்ற கம்பர், சூர்ப்பணகையைத் தைத்த காமனது பாணத்தைச் செப்பவருகையில்,

> தாடகைக்கொடி யாடட மார்பிடை
> ஆட வர்க்கர சன்னயி லம்புபோற்
> பாட வத்தொழின் மன்மதன் பாய்கணை
> ஓட வுட்கி யுயிருளைந் தாளரோ

[தாடகை என்னும் கொடியவளது பெரிய மார்பில் புருஷோத்தமனான இராமனது கூரிய அம்பைப்போல, திறமையாகப் போர்செய்யும் மன்மதனது பாய்கின்ற அம்புகள் சூர்ப்பணகையின் மார்பில் உருவியோட அதனால் அவள் அஞ்சிவருந்தினாள்.]

என இயம்பலாயினர். இவள் பாட்டியின்மீது முன் எய்த இராமபாணம் அவள்நெஞ்சில் தங்காது அப்புறஞ்சென்ற, மலையுருவிமரமுருவி மண்ணுருவிற்றென்றால், இன்று இவளைத்தைத்த மதனன்வாளியும் இங்கிவள் நெஞ்சுடன் நில்லாமல் அங்கிருந்த நஞ்சையும் பூசிக்கொண்டு அப்பாற்கழன்று அவ்விராவணன் மார்பிற் புதைந்து வீழ்த்திடவில்லையோ? அரக்கியர் உரம் நோக்கி எய்யுந்திறத்தில் தந்தைக்கு மைந்தன் இளைத்தவனல்லன்.

இனி, தம்மை வருத்திவாட்டுகின்ற இவைகளுக்குச் சீதையும் சூர்ப்பணகையும் வகைசெய்த முறையிலும் வேற்றுமை காணலாம். தன்மீது ஆரழலைப் பொழிகின்ற திங்களின் வெயிலால் வருந்திய சீதை, அதனை நோக்கி,

> கொடியை யல்லைநீ யாரையுங் கொல்கிலாய்
> படியி லின்னமு ததொடும் வந்தனை
> பிடியின் மென்னடைப் பெண்ணொ டென்றலெனைச்
> சுடுதி யோகடற் றோன்றிய திங்களே

[குளிர்ந்த இனிய பாற்கடலிற் பிறந்த சந்திரனே, நீஎன்போன்றவர்களை எவ்வளவு துன்புறுத்தினாலும் ஒருவரையும் கொல்கின்றதில்லை யாதலால் கொடியவ னல்லன். சாகாமருந்தாகிய இனிய அமிர்தத்தோடும கடலில்நீபிறந்தவனாகையால் உனக்குக் கொல்கின்ற குணம் எப்படிவரும். அதுவுமன்றி, பெண்யானைபோன்ற மெல்லிய நடையை உடையைஒருத்தி (திருமகள் - அவளும் நானே) உனக்கு உடன்பிறந்தாள் இருக்கின்றாள் என்பதையும் நினைப்பாயாயின் பிறகு நீ என்னை இவ்வண்ணம் சுட்டெரிப்பாயோ]

என்று குலநலமும் கிளையுறவுங் கொண்டாடி வேண்டுவாளாக, இராவணன் அருமைத் தங்கையோ

> கலையு வாமதி யேகறி யாகவன்
> சிலையின் மாரனைத் தின்னு நினைப்பினள்
> மலைய மாருத மாநெடுங் காலவேல்
> உலைய மார்பிடை யூன்றிட வோயுமால்

[கலைநிறைந்த பூரணசந்திரனே கறியாக, வலிய வில்லையுடைய மன்மதனை உணவாகத் தின்னும் எண்ணமுடன் எழுதலும், பொதியமலையிலிருந்து வருகின்ற தென்றற்காற்றாகிய நீண்ட எமனது வேல் அவள் மார்பில் வருந்தும்படி அழுந்த ஓய்ந்திடுவாள்]

> அலைக்கு மாழி யடங்கிட வங்கையான்
> மலைக்கு லங்களிற றார்க்கு மனத்தினள்
> நிலைக்கும் வானி னெடுமதி நீணிலா
> மலைக்க நீங்கு மிடுக்கினண் மாந்துவாள்

[அலைவீசுகின்ற கடல் அடங்கும்படி தன் அகங்கைகளால் மலைக்குலங்களை கொணர்ந்து தூர்த்துவிடவேண்டும் என்னும் எண்ணமுடன் எழும் அவள், வானத்தில் நிலைநிருக்

இன்ற பெரிய சந்திரனது நீண்ட நிலா தன்னை வருத்த,வலி யழிந்து ஒடுங்குவாள்]

அணிவி றிங்களை நுங்க வராவினைக்
கொணர்வெ னேடி யெனக்கொதித் துன்னுவாள்
பணியின் மென்முலை மேற்பனி மாருதம்
புணர வாருயிர் வெந்து புழுங்குமால்

[கட்பில்லாத சந்திரனை விழுங்க அதற்குப் பகையாகிய இராகுவென்னும் பாம்பை ஓடிப்போய்க்கொண்டுவருவேன் என்று கொதித்துச் செல்ல நினைக்கும் அவள், பருத்தமென்மையான முலைகளின்மேல் குளிர்ந்த காற்றுப்பட, அருமையான உயிர் வெந்து புழுங்குவாள்]

இன்னவண்ணமே பால்திரிந்து தயிரும்வெண்ணெயும் ஆயபரிசு சீதையைச்சேர, இச்சூர்ப்பணகையின் திறத்தில் விடமேறிக் கொலையும் பொருமாய்க் கெடுத்த கொள்கையை எங்குங்காணலாம் வேறொன்றாம் இச் செவ்வியில் காண்பதற்குளது. சீதையின் நிலைமையைச் செப்பிமுடிக்கின்ற கம்பர்,

வாச மென்கல வைக்களி வாரிமேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்
வீச வீச வெதும்பினள் மென்முலை
ஆசை நோய்க்கு மருந்து முண் டாங்கொலோ

[வாசனையுள்ள மெல்லிய கலவைச்சந்தனத்தை அள்ளித் தோழிகள்பூசப்பூச வாடிப் புழுங்கினள்; விசிறியால் வீசவீச மெல்லியமுலையள் வெதும்பினள்—ஆசைநோய்க்கு மருந்துமுண்டோ!]

எனக் கூறிக் கேட்டிருக்கின்றனர். மற்று, இராமனது உருவெளித்தோற்றத்தைக் கண்டுழலும் சூர்ப்பணகை

ஆகக் கொங்கையி னையனென் றஞ்சன
மேகத் தைததழு வுமவை வெந்தன
போகக் கண்டு புலம்புமப் புன்மையாள்
மோகத் துக்கோர் முடிவுமுண் டாங்கொலோ

[கரிய மேகத்தை இராமன் என்று எண்ணிப் பிடித்துத் தன் மார்பிலுள்ள முலைகளில் தழுவுவாள். அம்மேகங்கள் வெந்துபோகக்கண்டு அழுவாள். அவ் வற்பகுணமுள்ளவளது மோகத்துக்கு முடிவுண்டோ]

என எடுத்துக்காட்டுவார். சீதை யுற்றது, காதல்நோய் ஆசைநோய் என்னும் வாசகங்களால் இனிது குறிக்கப்பெற்றிருக்க, அரக்கி சூர்ப்பணகை உற்றது மோகம் என்னும் வாசகத்தினால் வேறுபட்டிருக்கின்ற நீர்மை நினைத்துணரற்பாலது. காதல்நோய்க்கு அது நாடிய பொருளை அடைவதல்லால் வேறு மருந்தில்லை; அதனை அடைந்தவுடன் நிறைந்தும்விடுகின்றது காதலானது, தானொன்றை யடையவேண்டுமென ஆசைப்படுவது போல் மேற்பார்வைக்குத் தோன்றுமேனும், தன்னைக் கொடுக்கின்ற கருத்தே அதன் உண்மை நிலை. "தனையுந் தறக்குந்தன்மை காமத்தேதங்கிற்றன்றே" என்றனரிக்கப்பர் முன் ஓரிடத்தில். மோகம் அத்தகைபதன்று தன்னை முன்வைத்துத் தன்பொருட்டு மற்றொன்றினை எய்தவேண்டும் எனும் எண்ணத்தால்வளர்வது மோகம். ஆதலின் மோகத்திற் கொருபோதும் முடிவில்லை. இதற் கடுத்தபாசுரத்தில்,

ஊழி வெங்கன லுற்றன ளொத்துமவ்
வேழை யாளி யிறந்தில ளென்பரால்
ஆழி யானை யடைந்தனள் பின்னையும்
வாழ லாமெனு மாசை மருந்தினே

[ஊழித்தீயில் அகப்பட்டவள்போல் தவித்தாளேனும், அந்த அமவ்லியாகிய சூர்ப்பணகை, இராமனை அடைந்து வாழலாம் என்று இன்னமும் அவளுக்கிருந்த ஆசையாகிய மருந்தினால் சாகாமல் இருந்தனள்]

என எடுத்துக் காட்டுகின்றனர். சீதையின்பால் நோயாயிருந்த ஆசை, சூர்ப்பணகையின் திறத்தில் மருந்தென மாறியது இப்படிச்சொல்வதால், ஆசையென்பதன் தன்மை, சீதையைச் சார்ந்திருந்த செவ்வியைவிடச் சூர்ப்பணகையைச் சார்ந்தபோது உயர்வடைந்ததோ என்று எண்ணவைக்கும் ஓர் வஞ்சனை செய்கின்றார் கம்பர். அதற் காளாகாமல் அப்பாற் சிறிது ஆராய்வோமெனின் உண்மை புலப்படும். தன்னுடைய மோகத்திற்கு இருப்பிடமாகிய தானே அழியாமல் அம்மோகத்தை மேன்மேலும் மிகவளர்ப்பதற்கு, இராமனை அடையலாம் என்னும் ஆசை இச்சமயத்தின் வலிய உயிர்க்கொரு மருந்தாய் அமைந்த பான்மையை இங்கு அறைகின்றார் கம்பர்.

இதற்கிடையில், மூன்று லோகமும் மூடிய அரக்கரென்னும் இருளை நீக்குதற்குத் தோன்றிய இராமனை போல், சூரியனும் உதயமாயினான்.

விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர்கண்ட வெப்பாள்
படியி லொண்மருங் குள்ளாள வெனையவன் பாரான்
கடிதி னேடினெ னெடுத்தொல்லை கரந்தவள் காதல்
வடிவி னானுடன் வாழ்வதே வாழ்வென மதியா

[பொழுதுவிடிந்ததும், ஒருவாறு உயிர் பெற்றவள் போன்றவளாகிய அக் கொடிய சூர்ப்பணகை, "நிகரற்ற அழகுடைய இவள் அருகிருக்கும் வரையில் இவன் என்னைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டான்; ஆகையால் விரைவாக ஓடிச் சென்று அவளை எடுத்து எங்கேயாயினும் விரைவில் மறைத்து வைத்துவிட்டு, அவளது காதலின் உருவமபோல் வாழுகிய இவனுடன் கூடிவாழ்வதே வாழ்வென மதித்து]

அந்தச் சூழல் வந்து நோக்கினாள். சீதையை ஒளித்து வைக்கவே யன்றி, அவ் வான்மீகச் சூர்ப்பணகையே போல் இவள் தின்னநினையாமை மிகநல்லதே. "அவள் காதல் வடிவினானுடன் வாழ்வதே வாழ்வு" என்பதை, "அவள் காதல்வடிவின்கண் உடன்வாழ்வதே வாழ்வு" எனப்பிரித்து," அச்சீதையின் காதல் விளக்கும் உருவத்தை எடுத்துக்கொண்டு நான் அவனுடன் வாழ்வதே வாழ்வு' எனப் பொருள் உரைப்பதும் சாலப் பொருந்தும். சீதையின் வடிவம்பூண்டு அவனுடன் வாழலாம் என்னும் கொக்கின் தலையில் வெண்ணெய் வைக்கும் மதி இக்காமவல்லிக்கு ஏற்றதே.

வந்தனள்; வள்ளலும் சந்திசெய்யற் கோர் மணித்தடஞ் சென்றிருந்தனன். சீதையைக்காத்து அயலேலர் இருண்ட சோலையில் இலக்குவன் இருந்ததைக் கண்டிலள். தாழாமற் சென்று அத்தாழ்குழற் சீதையைப் பற்றுதற்குத் தொடர்ந்தாள். கண்டனன் இளையோன்,

நில்லடீ யெனக் கடுகினன் பெண்ணென நினைந்தான்
வில்லெ டாதவள் வயங்கெரி யாமென விரிந்த
சில்லலோதியைச் செங்கையிற் றிருகுறப் பற்றி
ஒல்வ யிற்றுறைத் தொளிகிளிர் சுற்றுவா ளுருவி

[நில்லடீ என்று அதட்டிக்கொண்டு விரைவாக வந்து இவள் பெண் என்பதை நினைத்து வில்லை எடுக்காமல், எரியும் நெருப்புப்போன்ற அவள் மயிர்க்கற்றையைத் தன் சிவந்த கைகளால் முறுக்கிப் பற்றி, அவள் வயிற்றிலே விரைவாகத் தன் காலாலுதைத்து, ஒளிபொருந்திய தன் உடைவாளை உருவி]

ஊக்கித்தாங்கி விண்படர்வெனென் றுருத்தெழுவாளை
நூக்கி நொய்தினின் வெய்தினிழை யிலெனநுவலா[பாற்
மூக்குங் காதும்வெம் முரண்முலைக் கண்களு முறை
போகப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்

[பலங்கொண்டு இவளை எடுத்து ஆகாயமார்க்கமாய்ச் செல்வோமென்று கோபத்துடன் துவங்கிய சூர்ப்பணகையை இலக்குவன் எளிதில் கீழேதள்ளி, "இனி இப்படிப்பட்ட கொடிய காரியங்களைச் செய்யாதே செய்யாதே" என்று சொல்லிக்கொண்டே அவள் மூக்கையும் காதையும் கொடிய வலிய முலைக்காம்புகளையும் ஒன்றொன்றாக அறுத்து, கோபந்தணிந்து அவள் தலைமயிரை விட்டான்]

இராவணன் தங்கை காதும் மூக்கும் முலைக்காம்பும் இழந்தவிதம் இது. பெண்ணெனப் பெருந்தகை மனத்திடை நினைத்தானாகலின அவளைக் கொன்றிலன். பிற்றைநாள் தன்னைத் தூக்கிச் செல்லநிற்கும் அரக்கி அயோமுகியையும் இலக்குவன் இவ்வண்ணமே அங்கங்கள் குறைத்திடுவான். வான்மீகத்தின்படி முன் தாடகையையும் இலக்குவன் இப்படியே செய்திருக்கின்றான். அரக்கியர் மூக்கும் முலையும் அரிதற்கு நன்குபழகிய இவன் கைகள் போற்றற்குரியவே.

கலாநிலயச் சொல்லூடாட்டம். 3.

இடம்—வலம்

1. விநாயகர்
4. பாக்கு மரம்
6. காரியம்
8. வித்து
10. தஞ்சம்
12. கோழை
13. பாலை வனம்
14. ஓர் மரம்
15. வண்டு
17. விளம்பு
18. சூரியகுலத்தரசனொருவன்
19. மரக்கனு
20. தகுதி
22. பூமாலை
24. புதிய
25. நெருங்க
26. காலால் செல்
27. குமுதம்
28. வயது சென்றவர்

1		2	3	■	4		5	■
	■	6		7		■	8	9
10	11		■	12			■	
■		■	13			■	14	
15		16			■	17		
	■	18		■	19			■
20	21		■	22			■	23
24		■	25			■	26	
27				■	28			

மேல்—கீழ்

1. கோல்
2. மத்தியானம்
3. இலக்குமி
4. தூண்
5. ஒன்றாய்ச் சேர்
7. சுறுமீன்
9. மாதர்கள்
11. பேய்
13. காமதேனு
14. எருது
15. இளஞ்சிரிப்பு
16. வியர்வை
17. ஓர் நக்ஷத்திரம்
19. கோவலன் மனைவி
21. அபகரிக்கறு
22. ஐம்பொறிகளிலொன்
23. காட்டில் வசிப்பவர்
25. நம்முடைய
26. புதிய

கடைசிநாள் :—1932 வருடம், ஜூலை மாதம், 4 தேதி

இதற்குப் பிழையற நேரான விடை யனுப்புவோர்க்கு, கலா நிலயம், 1928-வது அல்லது 1930-வது அல்லது 31-வது வருட ஆப்லைதர்—கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று வெகுமதி யளிக்கப்படும். அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் சந்தாத் தொகையின்றி நம் பத்திரிகையை ஒரு வருடம் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இது அவர் இஷ்டத்தைப் பொருந்தியது.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். ஒருவரே, பல விடைகள் முயன்று, வேறு வேறு அனுப்பினும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றிற்கும 4 அணா தபால தலை யனுப்ப வேண்டும்.

இலங்கை வாசிகள், அவ்வூர்த் தபால் தலைகள் 25 சதம அனுப்பினாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

3. விடைகள், எம்முடைய காரியாலயத்திற்கு, அடுத்த ஜூலைமாதம் 4உக்குள் வந்து சேர்ந்துவிட வேண்டும்.

4. வந்த விடைகளில் ஒன்றுமட்டுமே பிழையில்லாது நேரா யிருக்குமாயின் அதனை அனுப்பியவருக்கு முன்னுரைத்தபடி பரிசளிக்கப்படும். நேரிய விடைகள் ஒன்றிற்கு மேற்படுமாயின், அதனை அனுப்பியவர்களின் பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு, யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கே அளிக்கப்படும்.

5. விடையின் நேர்மையும் மற்ற விடயங்களையும் பற்றி மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. அதனைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில், நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

7. விடைகள், பேர், மேல்விலாசம், வேண்டிய பரிசு, முதலியன தெளிவாய் எழுதப்படல் வேண்டும்.

விடைகளை, மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.
என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

கலாநிலயச் சொல்லூடாட்டம் நம்பர் 2. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம் வலம்:—(1) நவசக்தி, (5) புதுமை, (6) தின்று, (8) யாசகன், (10) புக்கர், (12) புவி, (15) கிளம்பல் (16) காது, (18) நிதி, (19) திவாகரன், (21) சுத்தம், (22) வித்து, (24) மதம், (25) மசாதம் அல்லது மயாதம். (26) திசை, (27) கலை, (28) கும்பி.

மேல்—கீழ்:—(1) நதி, (2) வன்பு, (3) சறுக்கு, (4) திமாகம். (5) புக. (6) தின்பு (9) சம்பரன், (11) களங்கப, (13) விகுதி, (14) புகா, (17) திதித்தல், (18) நிமித்தம், (20) வாதம், (21) சுமதி, (22) விரகு, (23) தம்பி, (25) மலை.

நேரியவிடை யனுப்பியவர்:—(1) T. R. கிருஷ்ணன், சென்னை, (2) K. A. ஷண்முக முதலியார், திருப்பத்தூர், (3) M முதத வெங்கடாசலம், மதுரை, (4) ஜான் செல்லையா ஜோஸப், சென்னை, (5) S பட்டம்மாள், மைலாப்பூர், (6) M. குழந்தைவேலுப் பிள்ளை, ஈச்சம்பட்டி, (7) முத்த K. M. M. அருணாசலம் செட்டியார், தேவகோட்டை. (8) C. கந்தையா, மன்னார், (9) C திருஞானசம்பந்தம், உசிலங்கோட்டை, (10) L. இராஜமாணிக்கம் பிள்ளை, திருக்கோவிலூர், (11) R முத்துசாமி, பொட்டயர்பாளையம், (12) S முத்தையா, மேல இலந்தக்குளம், (13) S. V சவுந்தரராஜன், சங்கரிதுர்க்கம், (14) A. P. L. ஷண்முகம் செட்டியார், வேகுபட்டி, (15) V சரவணமுத்து, மன்னார் (16) K. இராஜகோபால், தேவாரம், (17) U M. துரைசாமி பிள்ளை, சென்னை, (18) M. K. ஆறுமுகம், மானம்பூண்டி, (19) P. சந்தையா, அப்பங்கோட்டை, (20) S வெங்கடரமணி, தூத்துக்குடி, (21) S. பட்டம்மாள், புரசைபாக்கம், (22) வி. பட்டாபிராமன், சென்னை, (23) V P. கமலநாத முதலியார், சென்னை. பரிசு கிடைக்கப்பெறுபவர்:—S. முத்தையா, மேல இலந்தக்குளம்.

பெரிய புராணம்

மூலமும், அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும்.

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவரும்

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம்!

சேக்கிழார்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூறவேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை கனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல்நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரியபுராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம். இத்தகைச் சிறந்த தமிழ் நூலை ஏழைமக்கள் எளிதில் வாங்கிப் பயன்பெற இயலாது வருந்துதல் கண்டு, அவ்வருத்தம் போக்குதற்பொருட்டுப் பெரியபுராண மூலமும், அதற்குத் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வரைந்துள்ள அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும் சேர்ந்த ஒரு பதிப்பை டிம்மி ஆறு பாரங்கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக. முதல் சஞ்சிகை 1932ஞு ஜூன்மீ 10வ வெளிவரும். முழுப் புத்தகம் சுமார் 20 சஞ்சிகையில் முடிவு பெறக்கூடும். புத்தகம் முடிந்தபின் விலை ரூபா 5-க்கு மேல் ஆகலாம்.

சந்தா விவரம்:—மாதச் சஞ்சிகை ஒன்று தபாற் செலவுடன் ரூபா 0-4-6. புத்தக முழுவதற்கும் முன்பணம் (இம் முன்பணம் 1932ஞு ஜூன்மீ 1வக்குள் அனுப்பப்படவேண்டும்)—சென்னை ரூபா 3-8-0. வெளியூர் தபாற் செலவுடன் ரூபா 4-0-0. 6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக தரப்படும்.

— விலாஸம்:—முருகவேள் புத்தகசாலை, 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை. —

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :	தைலங்கள் :
ச்யாவனப்ராச	அமிர்தாமலக
ஜீவஸுதா	பிருங்காமலக
பாதாமி லேகியம்	ஸுகுமார
தந்வந்தரி லேகியம்	ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)

காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)

ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சிவினி (அணா 4)

நஞ்சன்கூடு பல்பொடி

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது)

(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம். வேளாளர் வீதி. புரசைபாக்கம். சென்னை. விலை ரூ. 1—4—0

தினகர வெண்பா

S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L., அவர்கள் பதிப்பித்தது.

கலாநிலயம் வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை அணா 6.

வர்த்தமானம்

கப்பல் விபத்து:—மேமாத இறுதியில் ஏடனுக்கு அருகில் அரபிக்கடலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஜியார்ஜ் பிலிப்பர் என்னும் பிரஞ்சுக்கப்பல் தீக்கிரையானதென்று தெரிகின்றது. ஓரிரவு முதல்வகுப்பு அறையிலிருந்த மின்சாரக்கம்பியிலிருந்து நெருப்பு ஏற்பட்டதாம். மெஸ்ஸஞ்சர்ஸ் மாரிடைம்ஸ் என்னும் கம்பனியாரால் 1931-வது வருஷம் புதியமுறையில் கட்டப்பட்ட கப்பல் இது. பற்றிய தீ வேகமாக எங்கும்பரவக் கம்பியில்லாத்தந்தியும் எரியுண்டதாம். எனவே உதவிக்கு அழைக்க இயலாது போயதாம். கப்பல் அதிகாரி மிக முயன்றும் பயனிலாது போகவே பிரயாணிகள் அபாய உதவிப்படகுகளில் ஏற்றப்பட்டனர். இக்கப்பல் எரிவதைக்கண்ணுற்ற ஒரு பிரிட்டிஷ் கப்பல் உதவிக்கு வந்ததாம். பின் சோவியத்து ருஷியாவுக்குச் சொந்தமான வேறொருகப்பலும் உதவிக்கு வந்ததாம். இவ்விருகப்பல்களின் முயற்சியால் 779 பிரயாணிகள் ஏடனில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் மற்றப்பிரயாணிகளின் கதி என்னவாயின வென்று தெரியவில்லையென்றும் கூறப்படுகின்றது. ஒரு அபாய உதவிப்படகில் சென்ற 75 பிரயாணிகளின் கதி தெரியவில்லை. அக்கப்பலில் 30 லட்சம் பிராங்கு மதிப்புள்ள தங்கம் இருந்ததாம். அதுவும் அகப்படவில்லை என்று ஏடன் செய்தி கூறுகின்றது.

***

கிரேக்கிய அரசாங்கக் காபினட் சபையினர் வரவு செலவு திட்டத்தைப்போட்டு யுத்தக்கடன் கொடுக்க முடியாத நிலையை அறிவிக்க, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதை எதிர்த்தனர். இக்காபினட்டு சபையார் கொடுக்க வழியில்லை யென்றும், பிரிட்டிஷார் கடன் பணத்தை இந்த வருட வரவு செலவில் கொடுக்கும்படி வற்புறுத்தினால் காபினட் சபையினர் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்வதல்லால் வேறு வழியில்லை யென்றும் கூறித் தமது பதவிகளை ராஜிநாமாச் செய்தனர் என்று அயல்நாட்டுச்செய்தி கூறுகின்றது.

***

இவ்வாரம் வியன்னாவிலிருந்து பாரிஸ்வந்துசேர்ந்த ஸ்ரீ. V. J. பட்டேல் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—

"நான் இப்பொழுது இந்தியா திரும்பப்போவதில்லை. உலகமெங்கும் யாத்திரை செய்து எல்லா நாட்டாருக்கும் இந்தியாவின் நிலையை விளக்கிப்பிரசாரம் செய்ய உத்தேசித்துள்ளேன். சில தினங்களில் இங்கிலாந்து செல்வேன். அங்குக் கொஞ்சகாலம் தங்கிப்பின் அமெரிக்கா செல்வான்"

***

ஸ்ரீமான் K. இராமரத்திநம் ஐயர், இம்மாதம்முதல் தேதி இவ்வுலக வாழ்க்கை நீத்துச் சென்றாரென்னும் துயர்மிகுந்த செய்தியால் எம்போன்றே இக்கலாநிலய வாசகர்களனைவரும் மிகவும் வருந்துவார். வயது ஐம்பத்தெட்டாகாமுன் இறைவன் இப்பெரியவரைத் தன் திருப்பதஞ் சேர்த்துக்கொள்ள நேர்ந்தனன். தஞ்சைமா நகரில், தனக்கு நிகரில்லை எனனுந் திறமையோடு நியாயவாதியாயிருந்த பெரும்புகழினர் ஸ்ரீமான் கல்லியாணசுந்தரம் ஐயருக்குப் புதல்வராய்ப் பிறந்து, கும்பகோணம் உயர்தரக்கலாசாலையில் ஆசிரியராய் விளங்கிய சாது சேஷையர் புத்திரியைமணந்து, நன் மக்கள் வாய்ந்த வாழ்க்கையிலமர்ந்து, எல்லோர்க்கும் இனியராய், தமிழ் ஆங்கிலம் என்னு மிவ்விரு மொழிகளிலும் பொதுவற நின்றபயிற்சியுடன் விளங்கிய ஸ்ரீமான் இராமரத்திநம் ஐயரை இழந்த உறவினரைப் போன்றே அவரிடம் பயின்றிருப்போரெல்லோரும், மனங்கலங்கி மாழ்குவார். நமது பத்திரிகையில் இவ்வறிஞர் வரைந்த அகப்பொருள் விளக்கமும் பின் இவர் உரையுடன் பதிப்பித்த குறுந்தொகையும், இறுதியில் இவர் வரைந்த சூளாமணியுரையும், இவருடைய கல்வித் திறமைக்கும், தான் அறிந்ததை மற்றவர்க்கு உவந்தளிக்கும் வண்மைக்கும் சான்றாகும். ஆங்கிலத்திலுள்ள சிறந்த நூல்களைத்தையும் இவர் ஓதியிருப்பதுமன்றி அம்மொழியிலும் இவர்வரையும் நடை மிகவும் இனிமையும் தெளிவும் வாய்ந்தது. கல்வியினளவு இவர் சீரிய குணங்களாலும் உயர்ந்தவர். இனிய சொல்லினர், ஈகையர், யாரொடும் பகை கொண்டிலர், தன்னொடு பயில்வார்க்கெல்லாந் தன்னருங் குணங்களை ஊட்டும் பெருமையர். ஒருநாளவருடன் உரையாடியிருப்பவரும் இத் துயர்கூர் செய்தியைக் கேட்குமளவில் மனமுளைந்து வருந்துவாரெனின், அவர் உறவினர்களும் உற்றறைந்த நண்பர்களும், மறவா நினைவுடன் அவரை நினைக்குந்தோறும், "இவர்போலொருவரை இனி நாம் என்றே பெறுவது" என ஆறுத்துயருடன் அகங்கரைந்திடுவார். யாமும்அவர்களிலொருவர். எனினும், அடிபட்ட கைகள் அழுகின்ற கண்களைத் துடைப்பதுபோல், அவர் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பரிவுகூறக் கடப்பாடுடையவர்களாயிருக்கின்றோம்.

***

லெட்சுமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை ஐந்தாவது ஆண்டு விழா பண்டித மணி திரு மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில் இம்மாதம் 12வ நடைபெறும்.

— தேகபலம் —

:: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.

5 டப்பிகள் ரூ. 4.

இனாம்! காம சாஸ்திரம் இனாம்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

: : இராமாயண வினா விடை : :

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. ஏழு காண்டங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அனுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

எங்களிடம் தமிழ் நாவல்களும், புராண நூல்களும், இராமாயண பாரத காவ்ய நூல்களும், தமிழில் சட்ட புத்தகங்களும் கிடைக்கும். விபரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.

V. S. T. சாமி, புத்தக வியாபாரம்,
புரசைவாக்கம் ஹைரோட், வேப்பேரி, சென்னை.

188971

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைறோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று நிறுசாயுள்ள சலொன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ஹைஸ் ஹல்லர்களும். அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேஹேல் கவர்களும், திம்பிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், சப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும, பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினுல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

7-வது வருடம்! 7-வது வருடம்!!

அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஒரே ரூபாய் சந்தாவில் 64 பக்கங்கள்.

எஸ். ஜீ. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்

நீங்கள் "அமிர்தகுணபோதினி"யைப் பார்த்திருக்கிறீர்களா ?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப் பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்திபோதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 64 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0.

மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனாம்.

புரொப்ரைட்டர்

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over ...	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of ...	16.54 %
Claims paid up to end of 1931 over ...	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)